# 1

**ஆதாரம் நீர்தானய்யா எங்களுக்கு ஆகாரம் நீர்தானய்யா**
வேறேதும் வேண்டாமைய்யா எங்களுக்கு
நீர்போதும் இயேசு ஐயா
மழை தரும் முகிலது உந்தன் அடிமை
அந்த இயற்கையும் சிரிப்பது உந்தன் பெருமை

மரணங்கள் என்றதுமே நெஞ்சை அடைக்கும்
மன்னவர் பேரைச் சொல்ல வாழ்க்கை சிறக்கும்
கருணைக் கடல் அவர் கண்ணில் இரக்கம்
உள்ளவரை இந்த பூமி இருக்கும்
வானத்து வீதியில் வந்திருப்பதாரு
தேவன் வலம் வரும் நந்தவனத்தேரு

நம்பிக்கையை நெஞ்சில் கொண்டு நீங்கள் ஜெபித்தால்
நிச்சயம் கர்த்தர் வந்து பதில் கொடுப்பார்
எண்ணங்களில் தூய்மை கொண்டு சொல்லி அழைத்தால்
எப்பொழுதும் உன்னை ஏந்தி நடப்பார்
ஆயிரம் இருந்தென்ன அவர் ஒன்றே போதும்
ஆனந்தம் அது என்ன நித்திய சந்தோஷம்

பஞ்சங்களும் பட்டினியும் பாரம் கொடுத்தால்
பார்த்துப் பரிகசிக்கும் தேவன் இல்லையே
சுற்றங்களும் சூழ்நிலையும் சோகம் கொடுத்தால்
மீட்டு ரட்சிக்கும் தேவன் போல இல்லையே
தாயவள் அன்பு என்ன அது ஒன்றும் இல்லை
தூயவர் அன்புக்கென்றும் விலை ஒன்றும் இல்லை

சங்கடங்கள் தீர்க்கும் தேவ சந்நிதியிலே
சத்திய வசனத்தின் ஆறுதல் உண்டு
நித்திய மகிழ்ச்சி தரும் இயேசு நாமத்தில்
பட்ட துன்பத்திற்கெல்லாம் தேறுதல் உண்டு
காலங்கள் அதுஎன்ன கடந்திட்ட போதும்
காத்திருப்போம் இன்னும் எதுவந்த போதும்

## 2

**ஆராதிக்கின்றேன் என் ஆண்டவர் இயேசுவையே**
ஆமென் அல்லேலுயா என்றே ஆராதிக்கின்றேன்-2

உள்ளங்கைகளில் வரைந்தவர்
என்னை உற்று நோக்கிக்கொண்டிருப்பவர்
இந்த உலகம் தோன்றுமுன்னே தெரிந்துகொண்டு
என் எல்லா எல்லைகளையும் அறிந்தவர்
இயேசு ரட்சகராய் உலகில் வந்து
இம்மானுவேலராய் உடனிருந்து
தம்மோடுகூட என்னை
வைத்துக்கொள்ளும்படி
தம்மையே எனக்கென்று தந்தவர்

சர்வலோகத்தையும் படைத்தவர்
சர்வ சிருஷ்டிக்கும் எஜமானர்
சகல கிரியைகளை அதினதின் காலத்தில்
நேர்த்தியாகச் செய்யும் தேவனவர்
அதிசயம் அற்புதமானவர்
ஆலோசனைக் கர்த்தரானவர்
வல்லமையுள்ளவர் நித்தியப் பிதா
சமாதானத்தின் தேவனே

நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்
எங்கும் எதிலும் நிறைந்திருப்பவர்
அலைகள் கொந்தளிக்க மலைகள் உருகிவிட
மறுபடியும் வரப்போகிறவர்
துதியும் ஞானமும் வல்லமையும்
மகிமையும் கனமும் ஸ்தோத்திரமும்
பெலனும் பெற்றுக்கொள்ள பாத்திரரான
ஆமென் என்பவரும் அவரே

## 3

**ஆராதனை உமக்கே....ஆராதனை உமக்கே....**
ஆராதனை உமக்கே...ஆராதனை உமக்கே....
எல்லையில்லா ஆனந்தமே
எப்பொழுதும் ஆராதனை

துதிகளின் மத்தியில் வாசம் செய்திடும்
எங்கள் ஜீவ தேவனே உமக்கு ஆராதனை
அதிசயம் செய்திடும் அன்பு தெய்வமே
எங்கள் ஆறுதலே அடைக்கலமே ஆராதனை
வல்லமையே வழிகாட்டியே.
வணங்குகிறோம் உம்மை மட்டுமே

ஜெயபெலமான எங்கள் யுத்த வீரரே
சுத்தக்கண்ணணே உமக்கு என்றும் ஆராதனை
நீதியை வலக்கரத்தில் ஏந்திக்கொண்டு நீர்
என்னை தாங்கிக்கொண்ட கிருபைக்காக ஆராதனை
பட்சபாதம் இல்லாமலே பார்ப்பவரே ஆராதனை

தேற்றரவாளரான தூய ஆவியே
ஊற்றுத்தண்ணீரே உமக்கு என்றும் ஆராதனை
நிலைவரமான எங்கள் நித்ய ஆவியே
சத்ய ஆவியே உமக்கு என்றும் ஆராதனை
திரியேக தேவ மகிமையே தினம்தோறும் ஆராதனை

## 4

**அபிஷேகம் அபிஷேகம் என்னில் வந்ததே**
அக்கினியின் அனல் இன்று என்னைத் தொட்டதே-2

நிம்மதி நிம்மதி எனக்குள்ளே இருக்குது
நிச்சயம் ஒருபதில் கிடைக்குது கிடைக்குது
இயேசுவின் ரத்தம் ஜெயமது ஜெயமதுவே

வல்லமை வல்லமை எனக்குள்ளே இறங்குது
வன்கண் பொல்லாப்பு விலகுது விலகுது
இயேசுவின் நாமம் ஜெயிக்குது ஜெயிக்குதுவே

ஆலயத்தின் மகிமையும் என்னைத் தொட்டதினால்;
ஆவிக்குள்ளே அதிசயம் நடக்கின்றதே-2

ஆமென் ஆமென் ஆனந்தம்
அல்லேலுயா ஆனந்தம்
ஆவியான தேவனுக்கே அல்லேலுயா-2

பெந்தகோஸ்தின் அந்த நாளும் இன்று வந்ததே
இடம் அசைந்திடும் பெலன் இறங்கிட்டதே-2

மந்திர தந்திர செய்வினை கட்டுகள்
அறுக்கிற வல்லமை எனக்குள்ளே இறங்குது
இயேசுவின் வார்த்தையில் விடுதலை பிறக்குதுவே

மரணத்தின் கூறுகள் கிழிக்கிற வல்லமை
இருளின் சக்தியை அழிக்கிற வல்லமை
இயேசுவின் மூலம் நடக்குது நடக்குதுவே

ஆர்ப்பரிப்பும் ஆனந்தமும் என்னில் வந்ததினால்
அப்பப்பப்பா ஆவிக்குள்ளே அனல் மூண்டதே-2

ஆமென் ஆமென் ஆனந்தம்
அல்லேலுயா ஆனந்தம்
ஆவியான தேவனுக்கே அல்லேலுயா-2

## 5

**அல்பாவே ஒமேகாவே**
ஆதியும் அந்தமும் ஆனவரே
அக்கினியே அருள் மழையே
அடைக்கலம் கொடுத்ததிட்ட ஆண்டவரே-2

தேவ தேவனுக்கு ஆராதனை
துதி ஆராதனை துதி ஆராதனை
எங்கள் மன்னாதி மன்னருக்கு
ஆராதனை துதி ஆராதனை-2

உம்மைப் போற்றுகிறோம்
உம்மை உயர்த்துகிறோம்
உம்மை வணங்குகிறோம் தேவனே
எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்
உம்மை ஸ்தோத்தரிப்பேன் தேவனே-2

ஒருவரும் சேரா ஒளியினில் வாசம்
செய்கின்ற மெய் தெய்வமே-ஐயா
செய்கின்ற மெய் தெய்வமே-2

## 6

**ஆனந்தம் ஆனந்தம் என்ன ஓர் ஆனந்தம்**
ஐயா உம் சந்நிதியில் ஆனந்தமே
பேரின்பம் பேரின்பம் பொங்குது பேரின்பம்
உள்ளத்தில் பொங்குது பேரின்பமே-2

அல்லேலுயா அல்லேலுயா அல்லேலுயா
ஆனந்தத்தில் எந்தன் உள்ளம் பொங்குதய்யா

மேகம் மீதிலே இயேசு ராஜன் வேகமாய்
வரும் நாளுக்குத்தான் நான் இருக்கிறேன்-2

என்னை அழைத்திட மணவாளன் வரும்நாளிலே
கண்கள் பனித்திட கரம்பிடிக்க காத்திருக்கிறேன்-2

அல்லேலுயா அல்லேலுயா அல்லேலுயா
ஆனந்தத்தில் எந்தன் உள்ளம் பொங்குதய்யா

தேவ தூதரின் ஆரவாரத்தோடவே
இயேசு ராஜாவின் பரிவாரமே-2
எக்காள சத்தம் வானத்திலே தொனித்திடிதே
இக்காலத்திலே எந்தன் நெஞ்சம் இனித்திடுதே-2

அல்லேலுயா அல்லேலுயா அல்லேலுயா
ஆனந்தத்தில் எந்தன் உள்ளம் பொங்குதய்யா

யூத சிங்கமாம் திருப்பாதம் வெண்கலமாம்
வெண்மைச் சிவப்பான விடிவெள்ளியாம்-2
தலை தங்கநிறமயமான இயேசு வருகையில்
என் அங்கமெல்லாம் அடிபணிந்து வணங்கிடுதே-2

அல்லேலுயா அல்லேலுயா அல்லேலுயா
ஆனந்தத்தில் எந்தன் உள்ளம் பொங்குதய்யா

காலம் வந்ததே மணவாளன் மார்பினில்
இந்த மணவாட்டி சாய்ந்திருக்கிறேன்-2
என் தலை அவர் இடக்கரத்தின் கீழ் இருக்குமே
அவர் வலக்கரம் அடியேனை(அடியாளை)
அணைத்திருக்குமே-2

அல்லேலுயா அல்லேலுயா அல்லேலுயா
ஆனந்தத்தில் எந்தன் உள்ளம் பொங்குதய்யா

# 7

**ஆனந்தமாக அலையலையாக ஐய்யா உம் சந்நிதியில் நான்**

அநுதினம் நுழைவேன் அன்பினில் மகிழ்வேன் உம் அருகில்
ஒரு மனமாக ஒரு நினைவாக இருப்பேன் உம் அருகினிலே
இதைவிட வேறென்ன வேண்டுமோ எனக்கு வாழ்வினிலே

ஒவ்வொரு முறையும் விழித்திடும்போது
உம் முகம் பார்த்தே விழித்திடவேண்டும்
இதுதானே என் வாழ்வில் நான் வேண்டும் பாக்கியம்
காலையும் மாலையும் கணக்கில்லாமல்
கர்த்தரின் முன்னே காத்திட வேண்டும்
மெய்யாக இதுதானே ஐய்யா என் ஆசையும்
கண்மணிபோல் எனை காத்திடும் தேவனின்
கரமதில் நானும் அடங்கிருப்பேன்
என்னையும் ஒரு பொருட்டாக நினைத்திட
என்னதான் உமக்கு நான் கொடுத்தேன்

வழி தெரியாமல் வாழ்ந்திடும்போது
வலக்கரம் நீட்டி வரவழைத்தீரே
வந்தேனே உம்முன்னே என் இயேசு ராஜனே
உருத்தெரியாமல் சிதைந்திடும்போது
உருவகம் கொடுத்து உயிர்ப்பித்தீரே
உம் பாதம் அது போதும் எனையாளும் தேவனே
இது தெரியாமல் இதுவரை நானும்
இருட்டினில் மூழ்கிக் கிடந்தேனே
இரக்கமும் உருக்கமும் நிறைந்த தேவனின்
கிருபையினால் இன்று பிழைத்தேனே

தாயின் கருவினில் தோன்றினமுதலே
தாங்கி வந்தீரே ஏந்தி வந்தீரே
தள்ளாடும் வயதுவரைக்கும் தயை காட்டும் தகப்பனே
நோயும் நொடியும் அணுகிவிடாமல்

தீயும் தண்ணீரும் சூழ்ந்துவிடாமல்
கன்மலை வெடிப்பில் வைத்தென்னை காக்கும்
கனிவான தேவனே
யுத்தநாளில் என் தலையை மூடினீர்
இத்தனை அன்பா என் மீதில்
எத்தனை பெரிய பாக்கியமே-இந்த
அடிமைக்கு கிடைத்த சிலாக்கியமே

## 8

**அன்பின் பிதா ஆறுதலின் பாத்திரம்**

எங்கள் ஆண்டவரே உங்களுக்கு ஸ்தோத்திரம்
எல்லையில்லா ஆனந்தம் நீர் மாத்திரம்
உங்கள் அன்பின் முன்னே நாங்களும் எம்மாத்திரம்
சுவாசமுள்ள யாவும் உம்மைத் துதிக்கும்
உம்மைச் சொல்லும்போது உள்ளம் துள்ளிக் குதிக்கும்

இஸ்ரவேலருக்குள்ளும் நான் இது போன்ற
விசுவாசத்தைக் கண்டதில்லை என்று சொன்ன தேவனே
எங்கள் அன்பும்கூட அப்படித்தான் தேவனே-(2)
யோசனையில் பெரிய என் தந்தையே (2)
இன்று என்னையும் பெலப்படுத்தும் தந்தையே
கண்மணிபோல் காக்கும் எங்கள் கர்த்தரே (2)
பாவக் கட்டுகளைப் போக்கும் பரிசுத்தரே (2)

இதுவரை நடத்தின எபினேசரும் என்னை
இனியும் நடத்திச் செல்வார் உண்மையே
அவர் சொல்லிடும் வழி நடந்தால் நன்மையே (2)
வழியும் சத்தியமுமான ஜீவனே (2)
என்றும் ஆதியும் அந்தமுமான தேவனே
தேவைகளைத் தெரிந்த என் தந்தையே (2)
என்றும் உம்மை மட்டும் நினைக்கும் என் சிந்தையே (2)

வருத்தமும் வேதனையும் விலகிடச் செய்வார் எங்கள்
இளைப்பாறுதலின் தேவன் இயேசுவே
இனி என்ன குறை வந்திடும் என் வாழ்விலே (2)
மரணத்தை மரணத்தால் ஜெயித்தீர் (2)
மறுபடி மகிமையாய் உயிர்த்தீர்
இன்றுவரை என்னுடனே இருப்பீர் (2)
நான் சென்றவுடன் உம்முடனே அணைப்பீர் (2)

## 9

**அப்பா நீங்க இல்லன்னா**
ரொம்ப தப்பாதான் நடந்திருப்பேன்
உங்க அன்பு எனக்கு இல்லன்னா
பெரும் வம்புலதான் மாட்டியிருப்பேன்
உங்க இரக்கம் எனக்கு இல்லன்னா
தலை கிறுக்காய் போயிருப்பேன்
உங்க தயவு எனக்கு இல்லன்னா
ஒரு தறுதலையாயிருப்பேன்

இது உம்முடைய கிருபை உம்முடைய இரக்கம்
உம்முடைய தயவும்தான்-2
தேவ காருண்யமே என்னை தேடி வந்த தெய்வமே-2
இது உம்முடைய கிருபை உம்முடைய இரக்கம்
உம்முடைய தயவும்தான்-2

என் கண்ணுல நீங்க இல்லன்னா
சேத்து மண்ணுலதா புரண்டிருப்பேன்
என் சொல்லுல நீங்க இல்லன்னா
பெரும் கல்லடிதான் வாங்கியிருப்பேன்
இந்த நெஞ்சுல நீங்க இல்லன்னா
பெரும் வஞ்சனையில் சிக்கியிருப்பேன்
எனக்கெல்லாமா நீங்க இல்லன்னா
இன்னிக்கு இல்லாம போயிருப்பேன்

இது உம்முடைய கருணை உம்முடைய அன்பு
உம்முடைய நேசம்தான்-2
தேவ காருண்யமே என்னை தேடி வந்த தெய்வமே-2
இது உம்முடைய கிருபை உம்முடைய இரக்கம்
உம்முடைய தயவும்தான்-2

இந்த பூமி நீங்க இல்லன்னா
தானா சுத்தறத மறந்திருக்கும்
எங்க சாமி நீங்க இல்லன்னா
எல்லா உயிரையும் இழந்திருக்கும்
அந்த கடலு நீங்க இல்லன்னா
தண்ணீரு கறைய மீறியிருக்கும்
இந்த உடலு நீங்க இல்லன்னா
ஒன்னும் உதவாம போயிருக்கும்

இது உம்முடைய படைப்பு உம்முடைய சித்தம்;
உம்முடைய விருப்பமும்தான்
தேவ காருண்யமே என்னை தேடி வந்த தெய்வமே-2
இது உம்முடைய கிருபை உம்முடைய இரக்கம்
உம்முடைய தயவும்தான்-2

## 10

**அப்பா உம் கிருபையால்**
அன்பே உம் இரக்கத்தால்
இன்னும் உயிரோடிருக்கிறேன்
நான் இன்னும் அழியாதிருக்;கிறேன்

பாழும் நிலம்போல பரிதாபமான என்னை
பக்கம் நெருங்கி வந்து பட்சமாய் பார்த்தீர்
(பற்றிக் கொண்டேன் பாதமதை-
முத்தம் செய்வேன் கோடிமுறை-2)

தாயவள் அன்பைக் காட்டி முழங்காலில் தாலாட்டி
தந்தைபோல் அரவணைத்து உம்மிடத்தில் சேர்த்தீர்
(உம்மைப்போல தெய்வமில்லை-
உம்மிடத்தில் மாற்றமில்லை-2)
கண்மூடி படுக்கையில் காலைதோறும் விழிக்கையில்
என்றும் என்னோடிருக்கிறீர்
என்னை உறங்காமல் காத்து நிற்கிறீர்

ஆறு இக்கட்டுக்கும் பொல்லாப்புக்கும் விலக்கி
அடிமை என்னைக்கூட அன்பு கொண்டு காத்தீர்
(உந்தன் அன்பில் மாயமில்லை-
உம்மைப்போல யாருமில்லை-2)
மரணப் பள்ளத்தாக்கில் நான் நடந்து போகையிலும்
இருளின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்டீர்
(உந்தன் முன்னே தோல்வியில்லை-
உம்மையன்றி தெய்வமில்லை-2)
தண்ணீரைக் கடக்கையில் தள்ளாடி நடக்கையில்
தோளில் தூக்கிச் சுமந்தவரே
தீங்கு நாளில் என்னை மறைத்தவரே

தேவ ராஜ்ஜியத்தில் என்னைக் கொண்டு போய் சேர்க்க
பாவ ராஜ்ஜியத்தில் எனக்காக வந்தவரே
(எனக்காக வந்தவரே-எல்லோருக்கும் பெரியவரே-2)
இயேசு நாமத்திலே என்றும் எங்கும் ஜெயம் எடுக்க
நேசம் வைத்து உம்மை எனக்காக தந்தவரே
(உத்தமரே உம் பாதம்-உண்மையிலே அது போதும்-2)
சத்தியத்தில் வழி நடத்தி நித்தியத்தில் சேர்ப்பதற்கு
நித்தம் புது கிருபை தந்தீர்-தேவ
சித்தம் கொண்டு எனக்குள் வந்தீர்

## 11

**அவர் என்னை நடத்திடும் விதமே தனி**
ஆயிரம் மடங்கு பெருகுவேன் இனி
ஆசிர்வதிக்கும் கரம் என்னுடன் இருக்க
அன்பு காட்டி என்னை அரவணைத்திருக்க
நான் அவருக்குள் பிழைக்கிறேன்
நான் அவருக்குள் அசைகிறேன்
நான் அவருக்குள் இருக்கிறேன்

எகிப்தில் இருந்து என்னை புறப்படச்செய்து
எதிர்த்த செங்கடலில் நடக்கச்செய்தார்
எதிரியின் சேனையை கடலில் மூழ்கடித்து
என்மேல் அக்கறை கொண்டு கரை சேர்த்தார்
வனாந்திரம் அது வழியாய் இருந்தும்
வஸ்திரங்கள் பழசாகவில்லை-அவர்
முகாந்திரத்தின்படி நடந்த பாதையில்
பாதரட்சைகள் தேயவில்லை
அவர் கற்பனைக் களஞ்சியம்
அவர் செயல்களில் மகத்துவம்
அவர் யோசனை ஆச்சர்யம்

வழிகளில் வருத்தங்கள் வந்தபோதெல்லாம்
வார்த்தையாலே என்னை பெலப்படுத்தி
விழிகளில் வழிகிற கண்ணீர் துடைத்து பெரும்
நேர்த்தியாக என்னை திடப்படுத்தி
பகலில் மேகமும் இரவில் அக்கினியும்
பாதை காட்டிட தவறவில்லை
வறட்சி தாகமும் வந்த போதிலும்
ஊற்றுத்தண்ணீர்க்கென்றும் பஞ்சமில்லை
என் மேய்ப்பராய் இருப்பவர்
என்னை ஏந்தியே சுமப்பவர்
என் தேவைகள் தெரிந்தவர்

இறந்தவன் என்னையும் திரும்ப உயிர்ப்பித்து
இயேசுகிறிஸ்துவுக்குள் பிழைக்கச்செய்தார்
ஜீவனைத் தந்தவர் தயவும் பாராட்டி
எல்லாத் தேவைகளும் கிடைக்கச் செய்தார்
சிங்கக்குட்டிளும் பட்டினி கிடந்தாலும்
எங்கள் அப்பம் என்றும் குறைந்ததில்லை
வங்கக் கடலதில் வலுப்புயல் வந்தாலும்
தங்கும் இடமிருக்க பயமுமில்லை
அவர் ஏக சக்ராதிபதி
என் இளவயதின் அதிபதி
என்னை விசாரிக்கும் நீதிபதி

இந்த பூமியில் உள்ளவரை எக்காலமும் நல்லவரை
நான் தினமும் பணிந்து கிடப்பேன்
அந்த பார்வோனை தொடர்ந்து எதிர்ப்பேன்

## 12

**அவரே என் கன்மலை அவரே என் ரட்சகர்**
அவரே என் கோட்டையும்
அவரே என் எல்லாமுமே
தூயாதி தூயவர் துதிகளுக்கே பாத்திரர்
ஆராதனை நாயகர் ஆட்கொண்ட தேவனே

தேவாதி தேவன் தினம்தோறும் தங்கும்
தேவாலயம் நாமல்லோ
ராஜாதி ராஜன் ரட்சிப்பின் தேவன்
அவர் நாமம் பெரிதல்லோ

தாயின் கருவில் தோன்றின முதலே
தாங்கி வந்தவர் ஏந்தி வந்தவர்
உலகம் தோன்றிடும் முதலே என்னை
தெரிந்து கொண்டவர் அறிந்து கொண்டவர்

எனக்காக பூமிக்கு வந்தீர் ஐயா
எனக்காகவே மரித்தீர்-2

வானாதி வானம் வணங்கிப் பணிந்திடும்
பரிசுத்தர் நீரல்லோ
பரமேறிச் சென்ற பார் போற்றும் தேவன்
பரலோகம் உமதல்லோ

பாதம் கல்லில் இடறாமல் என்னை
பாதுகாக்கும் ஒரு தெய்வம்
நோயும் நொடியும் அணுகாமல் என்னை
காவல் செய்யும் குலதெய்வம்
எனக்காக மீண்டும் வருவீர்
என்னை மறக்காமல் அழைத்துச்செல்வீர்-2

பரிசுத்த தீபம் பரலோகம் செல்ல
பலி பீடம் நாமல்லோ
மரித்தோரை எழுப்பி மறுரூபம் கொடுக்கும்
பரிகாரி அவரல்லோ

நேற்றும் இன்றும் என்றும் மாறா
தேற்றும் அவரது வலது கரத்தினில்
வேற்றுமையின் நிழல் இல்லாத
தேவ பாதம் போதும் என்கிறேன்
எனக்காக யாவையும் செய்தீர்
எல்லாம் எனக்காக செய்து முடித்தீர்-2

சிங்காசனத்தில் வீற்றிருக்கும் தேவன்
அவர் நாமம் அடைக்கலம்
ஆராதனைகள் அலங்கார துதிகள்
அவர்க்கென்றும் சமர்ப்பணம்

## 13

**ஐயா இயேசு ஐயா எங்களையும் தெரிந்து கொண்ட ஐயா**

பட்ட மரம் போலிருந்தேன் துளிர்க்கச் செய்தீரே
பாவியான என்னைக்கூட மீட்டெடுத்தீரே
சிறகிரண்டும் தறிக்கப்பட்டு சிதறிக்கிடந்தேன்
சிட்டாகப் பறக்க வைத்த சிறந்த தெய்வமே

பாவம் என்ற கடலினிலே மூழ்கிக்கிடந்தேன்
ஒரு பாதுகாப்பு இல்லாமல் காத்துக்கிடந்தேன்
பரம அழைப்பிலே என்னை சேர்த்துக்கொண்டீரே (2)
பட்ச பாதம் இல்லாமலே அணைத்துக்கொண்டீரே (2)

உம் வழியில் நாளும் என்னை நடத்திக்கொண்டு போய்
ஒரு உண்மையான ஊழியத்தை சொல்லித் தரனுமே
நல்ல ஒரு போர்ச்சேவகனாய் வரனுமே (2)
என் சிலுவை எடுத்துக் கொண்டு
உம்மை பின் தொடருனுமே (2)

உம் பார்வை பட்ட போதுதானே உண்மை தெரியுது
உம் வசனம் மட்டும் தானே எனக்கு உயிர் கொடுக்குது
உண்மையிலே உந்தன் அன்பு சிலிர்க்க வைக்குது (2)
நீர் நல்லவர் என்று உள்ளம் ருசித்துப் பார்க்குது (2)

நிலைகுலைந்து வாழ்க்கையிலே நித்தம் தவிக்கும்
எத்தனையோ மனிதருண்டு உமக்குத்தெரியுமே
அத்தனைபேரும் உம்மை அறிய வேண்டுமே (2)
நித்திய ஜீவனுக்குள் நுழைய வேண்டுமே (2)

இடைவிடாத ஜெபத்தினிலே தரித்து நிற்கனும்
விசுவாச ஓட்டத்திலே நிலைத்து நிற்கனும்
சாத்தானின் தந்திரத்தை நன்கு அறியனும் (2)
ஆவியின் பட்டயத்தாலே விளாசித் தள்ளனும் (2)

# 14

**அழகே, அமுதே, அநுகூலமே**
என் ஆவியில் நிறைந்த பேரின்பமே
உறவே உலகே உன்னதமே
என் உயிருடன் கலந்த ஓவியமே
கனிமொழியே எங்கள் காவியமே
என் கண்ணுள்ளே புகுந்த ஒளி வெள்ளமே

பாலும் தேனும் ஓடியதே
எங்கள் தேசத்தில் உம் நிழலாடியதே
வறுமையும் பெருமையும் தொலைந்திட்டதே
என் வள்ளலே உமை மட்டும் நினைத்திடுதே

கருவினில் என்னைத் தெரிந்தவரே
என் ஒருவழி நீர் மட்டும் அறிந்தவரே
விரும்பி என் பெயர் சொல்லி அழைத்தவரே
நெருங்கிவந்தென்னை அணைத்தவரே

ஆதியும் அந்தமும் ஆனவரே
என் ஆயுசு நாட்களின் காவலரே
நீதியில் வாசமாய் இருப்பவரே
என் ஆவியில் சுவாசமாய் நுழைந்தவரே

பரிசுத்த தேவனின் பாதத்திலே நான்
பகலென்றும் இரவென்றும் கிடந்திடுவேன்
உறவென்று அவருக்குள் நிலைத்திடுவேன்
உன்னத துதிகளைச் செலுத்திடுவேன்

## 15

**அழைப்பவர் இயேசு அவரிடம் பேசு**

அச்சம் என்ன பயம் என்ன அந்தப் பக்கம் வீசு
உயிர் தரும் மூச்சு உடன் வரும் பேச்சு
ஆண்டவர் படைப்பினில் அதிசயம் ஆச்சு

அழுதிடும் குழந்தைக்கு பால் கொடுக்கும்
அன்புத் தாய்க்கு ஈடுஇணை எதுவாகும்
அதைவிட ஒருபடி மேலாகும்
நம் ஆண்டவர் கருணையும் அதுவாகும்

செய்திடும் செயல்களைச் சிறந்திடச் செய்
வரும் சுமைகளை எல்லாம் அவரிடம் வை
விழுந்திட விழுந்திட எழுந்திடச் செய்
உன்னைத் தாங்கிட இருகரம் இருக்குது மெய்

முதலென்றும் முடிவென்றும் முக்கனிச்சுவையென்றும்
எதிலொன்றும் இயங்கிய ஜீவன் அவர்
எங்கள் தேவன் அவர்

ஆண்டவரை நாடிடுவோம் அல்லேலூயா பாடிடுவோம்
அவரிடம் குறைகளைக் கூறிடுவோம்
அவர் புகழினைப் பாடி மகிழ்ந்திடுவோம்

அலைகடல் மீதினில் நடந்தவரே
அன்று ஆயிரம் தடைகளைக் கடந்தவரே
ஆத்தும தரிசனம் தருபவரே
தூய ஆவியில் எப்போதும் நிறைந்தவரே

வணக்கத்திற்குரிய வாரிசவர்
எந்த நெருக்கத்திலும் எங்கள் நேசரவர்
தனக்கென்று எதுவுமே வைக்காமலே
தந்த தயவுள்ளம் கொண்ட நம் தேவனவர்

குறைவொன்றும் இல்லாத நிறைவொன்றை உண்டாக்கும்
நித்திய ஜீவனின் தந்தை அவர் எங்கள் சிந்தை அவர்

கேளுங்களேன் கொடுத்திடுவார்
தட்டுங்கள் அப்போது திறந்திடுவார்
தேடுங்கள் எல்லாமே கிடைக்கும் என்றார்
நம் தேவனின் நீதியை ராஜ்ஜியத்தை

## 16

**சின்ன பிள்ளை பாடிடும் பாடல்**
கேட்கும் இயேசு இராஜனே
உம்மை தினமும் ஜெபித்திடும்
எண்ணம் வேண்டும் எந்தன் தேவனே

பூத்துக் குலுங்கும் மலரெல்லாம்
என் தேவன் சிரிக்கும் சிரிப்புதானய்யா
என் வார்த்தை உதிரும் போதெல்லாம்
என் மன்னன் போட்ட பிச்சைதானய்யா

அன்னை தந்தை எங்கள் இரு கண்கள் என்று நாங்கள்
எந்த நாளும் வாழ வேண்டும் இயேசு இராஜனே
ஒளி மின்னுகின்ற உந்தன் பாதை செல்லுகின்ற நாங்கள்
உந்தன் மந்தை ஆட்டுக்குட்டி தானே நல்ல மேய்ப்பனே

பேசும் மொழி ஒன்று அது உண்மை என்று கொண்டு (2)
அல்லேலுயா பாடுகின்ற இந்த நாவிலே
ஒரு கள்ளம் கபடம் இல்லை என்றும் எங்கள் வாழ்விலே

நல்ல பிள்ளை என்று நீர் சொல்ல வேண்டும் இன்று
நேர் பாதை காட்ட வேண்டுமய்யா பரம தேவனே
உம் சொந்தமாக வாழ்ந்திருந்து எந்த காலமும் மகிழ்ந்து

உந்தன் நாமம் உயர்த்த வேண்டும் வரங்கள் தாருமே

வேத வசனம் இன்று எங்கள் இருதயத்தில் வந்து (2)
கால்களுக்கு தீபமாக மாற வேண்டுமே
நல்ல கனி கொடுக்கும் மரங்களாக வளர வேண்டுமே

சிலுவை சுமந்த தோளில் பெரும் வலி எடுக்கும் நாளில் கூட
மறையும் முன்பு மன்னிப்பையும் வழங்கிப் பார்த்ததேன்
அன்று பாவம் செய்த பாவிகளின் குறையைத் தீர்த்ததேன்

சீடர் பன்னிரெண்டு அந்த நாளில் உமக்கு உண்டு (2)
இந்த நாளில் நாங்கள் உந்தன் சீடர் ஆகிறோம்
எங்கள் தேவன் மகிமை எங்கும் பரப்ப தூது போகிறோம்

## 17

**தேவ சத்தம் கேட்கும் வரைக்கும் நான் காத்திருக்கிறேன்**
தேவ உத்தரவு வரும் வரைக்கும் எதிர் பார்த்திருக்கிறேன்

என் சுயமாய் ஒன்றும் செய்யத்தெரியாது
எனக்கெந்த ஞானமும் கிடையாது-2
பரத்திலிருந்து வரும் வரத்துக்காகவும்
தேவ கரத்திலிருந்து வரும் சுகத்துக்காகவும்
காத்திருக்கிறேன் எதிர் பார்த்திருக்கிறேன்

இடைவிடாமல் ஜெபிக்கும் புது பெலத்தை தாரும் ஐயா
இரவில் விழித்து துதிக்கும் துதி ஆடை வேண்டுமய்யா-2
கனவில் கூட வந்து அருகில் நின்று கொண்டு
சொப்பனம் தர வேண்டுமே
சொப்பனம் தாரும் ஐயா-தேவ சொப்பனம் தாரும் ஐயா

என் சித்தம் நிறைவேற முடியாது
எனக்கெந்த தகுதியும் கிடையாது-2

வெறுமையான என்னை நிரப்பி நடத்தவும்
உமது யோசனையைக் கேட்டு நடக்கவும்;
காத்திருக்கிறேன் எதிர் பார்த்திருக்கிறேன்

உருகி உணர்ந்து ஜெபிக்கும் நல்ல
உணர்வைத் தாருமைய்யா
அருகில் நெருங்கிப் பழகும் பரிசுத்தம் வேண்டுமய்யா-2
பரிந்து பேசுகின்ற பரத்தை தொடுகின்ற
ஜெபத்தை தரவேண்டுமே
ஆவி ஊற்றுமைய்யா ஜெப ஆவி ஊற்றுமைய்யா

இந்தக் களிமண் உடலில் ஒன்றும் கிடையாது
உம் ஆவி ஊற்றப்பட்டால் உடையாது-2
கருத்தாய் ஜெபிக்கின்ற வார்த்தைக்காகவும்
பரிசுத்தாவியின் பெலத்திற்காகவும்
காத்திருக்கிறேன் எதிர் பார்த்திருக்கிறேன்

தேவ சத்தம் கேட்கும் வரைக்கும் நான் காத்திருக்கிறேன்
தேவ உத்தரவு வரும் வரைக்கும் எதிர் பார்த்திருக்கிறேன்

## 18

**எல்லோர்க்கும் எல்லாமும் கிடைத்திடவே**
உம் ஆசி அள்ளித் தர வேண்டுமே
இல்லையென்ற சொல் என்றும் மறைந்திடவே
நீர் இருப்பதை நம்ப வேண்டுமே
வாழ்க்கை ஓடத்தில் நாங்கள் பயணியாகிறோம்
நீர் வழி காட்டும் எங்கள் இயேசுவே

இயேசு ராஜனே எங்கள் தேவ மைந்தனே
உம்மையன்றி வேறு தெய்வம் எங்கும் இல்லையே
இந்த மண்ணிலே நீரும் வந்த பொழுதிலே
மனிதம் புனிதம் ஆனதுதான் உந்தன் தயவிலே

நீர் நிலம் காற்று எல்லாம் நீர் தந்த பிச்சை
நீர் காப்பாற்றும் எங்கள் இயேசுவே
ஒரு தாயாக எந்த நாளுமே

நல்ல நாளில் அவதரித்த எங்கள் செல்வமே
இந்த நாளில் நாங்கள் உந்தன் செல்லப்பிள்ளையே
எந்த நாளும் மாறிடாத எந்தன் நேசரே
சொந்தமாக நீர் எனக்கு வந்த தெய்வமே
அன்று வந்த நீர் இன்று எங்களுடன் இருந்து
பாவங்களைப் போக்கிடவே பரிசுத்த மாக்கிடவே
இருதயத்தில் வாசம் செய்யும் ஆவியே
பரிசுத்த ஆவியே

கள்ளமில்லா உள்ளமெல்லாம் உம்மைத் துதிக்குதே
எல்லையில்லா இன்பத்திலே துள்ளிக் குதிக்குதே
மெல்ல மெல்ல உந்தன் ஆவி என்னை நிரப்புதே
அள்ள அள்ள குறைந்திடாத அன்பில் நனையுதே
இல்லம்தோறும் இந்தக் கிருபை வந்து வந்து பாய்ந்திடவே
நினைவு கூறவேண்டும் எங்கள் தெய்வமே உலகை
நினைவு கூறவேண்டும் எங்கள் தெய்வமே

## 19

**என் ஆத்துமாவே முழு உள்ளமே**
அவர் பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி
ஸ்தோத்தரி.. ஸ்தோத்தரி..
அவர் செய்திட்ட நன்மைகள் ஏராளம்
அதை மறவாமல் நீ ஸ்தோத்தரி
ஸ்தோத்தரி.. ஸ்தோத்தரி..

உன் அக்கிரமம் எல்லாம் மன்னித்தவர்
உன் நோய்களை குணம் ஆக்கினவர்
உன் பிராணனை அழிவுக்கு விலக்கினவர்

இரக்கம் கிருபையினால் முடிசூட்டினவர்

உன் வாயை நன்மையினால் நிரப்பினவர்
வயதைக் கழுகுக்குச் சமமாய் மாற்றினவர்
ஒடுக்கப்பட்டு தவிக்கின்ற யாவருக்கும்
கர்த்தர் நீதியும் நியாயமும் செய்கிறவர்

கர்த்தர் உருக்கமும் இரக்கமும் நிறைந்தவர்
மிகுந்த  சாந்தமும் கிருபையும் உள்ளவர்
அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளாதர்
என்றைக்கும் கோபம் கொண்டிராத தேவனவர்

நம் பாவங்களுக்குத் தக்கதாய் செய்யாமலும்
நம் அக்கிரமத்துக்குச் சரிக்கட்டாமலும்
ஒரு பிள்ளைக்கு தகப்பனின் இரக்கத்தைப்போல்
கர்த்தர் தமக்குப் பயந்தவர்க்கு இரங்குகிறார்.

## 20

**என் ஆவியும் என் ஆத்துமாவும் என் சரீரம்**
என்றும் இயேசுவுக்கு
என் மனமும் என் உணர்வும் என் சித்தமெல்லாம்
என் தேவனுக்கு

என் காலங்கள் அவர் கரத்தில்
என் நேரங்கள் அவர் கணக்கில்
இணையேதுமில்லாத அன்பு தந்தென்னை
மீட்ட என் தெய்வ இயேசுவுக்கு
ஒரு நாளும் குறையாமல் நன்றி
சொல்வேனே நல்ல தேவாதி தேவனுக்கு

இருளையும் ஒளியையும் பிரித்தவர்
அந்த காற்றையும் கடலையும் படைத்தவர்

இந்த களிமண்ணான என்னை கரத்தில் வைத்துக்கொண்டு
அவர்க்கு பிரியமாய் வனைந்தவர்
ஒரு குறையும் இல்லாத நிறைவு தந்து என்னை
நேர்த்தியாக செய்து முடித்தவர்
இனி சோகங்கள் எனக்கில்லை
பெரும் பாரங்கள் எனக்கில்லை
ஆனந்தமாய் என் அப்பாவின் கரத்தில்
ஆயுள் முழுவதும் தப்பாமல் இருப்பேன்

விடுதலை தருகிற தேவனே
எனக்குள் விருப்பத்தை வைக்கிற ராஜனே
என்னைக் குறித்த உந்தனது நினைவு எப்பொழுதும்
நன்மைக்கேதுவாய் இருக்கிறதே
உம்மைப்பிடித்த நாள் முதலாய் விழித்த எனது கண்கள்
உண்மைக்கேதுவாய் நடக்கிறதே
இது உம்மாலே உண்டானது உள்ளம் தேனாக இனிக்கின்றது
ஆனாலும் என்ன ஒரு உற்சாகம்தானே
கானாவூர் கல்யாண கற்சாடி நானே

மறுபடி மறுபடி நினைத்தவர்
சொந்த மகனைப் போல நெஞ்சில் அணைத்தவர்
ஒரு வழியில்லாத என்னை குழியில் பார்த்தெடுத்து
விழியில் வைத்து என்னைக் காத்தவர்
ஒரு கழுகைப்போல என்னை சுமந்து கொண்டு வந்து
செட்டைக்குள்ளாக்கி மறைத்தவர்
இது ஆனந்த பாக்கியமே இதை எந்நாளும் பாடிடுவேன்
வாழ்ந்தாலும் இவ்வாழ்க்கை உம்மோடுதானே
வாழ்க்கையெல்லாம் இனி என் இயேசுதானே

## 21

**என் கண்மணி என் கண்ணின் மணியாக நீ**
என் உள்ளம் தேடிடும் உன் கண்ணில் நீரும் ஏன் இனி
யார் என்ன சொன்னாலும் இனி எந்தன் பிள்ளையாக நீ
வேறென்ன வந்தாலும் என் அன்பில் சிரிப்பாய் இனி

மண்ணில் பிறந்து வாழும்போது
வாழ்க்கை கதை தெரியாதா
வந்து போகும் துன்பம் எல்லாம் ஒரு நாளில் தீராதா
பூத்துக் குலுங்கும் பூக்கள் கூட மறு நாளே வாடாதா
வாடிப்போகும் வழி இருந்தாலும் புதுப்பூக்கள் பூக்காதா

போராடும் நெஞ்சே இளம்பிஞ்சே நீயும் கலங்காதிரு
ஏன்இந்த வாழ்க்கை என்று சோகம் கொண்டு திகையாதிரு
கல்வாரி காட்சியை கண்முன்னே நிறுத்திடு
உன்மீது உறுத்திடும் பாரத்தை மறந்திடு

கண்ணமதில் கைகளை வைத்து கலங்கிடும் கண்மணியே
கவலை என்ன கறைந்து போகும் கலங்காதே என்னுயிரே
வணங்கிடும் கர்த்தர் உன்னை வாழவைப்பேன் எந்நாளும்
உயிர்மூச்சு உன்னைக்காக்க உறங்காமல் கண்தேடும்

ஓயாமல் வீசும் புயல் காற்றும் உந்தன் நெஞ்சினிலா
வாராமல் வந்த பெரும் சோகம் உன்னை உருக்கிடுதா
தா உந்தன் வேதனை நான் வாங்கிக்கொள்கிறேன்
தாயாகி நான்உனை என் தோளில் சுமக்கிறேன்

அன்றியும் என் தீர்மானத்தில் அழைக்கப்பட்ட உந்தனுக்கு
சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்குமென்று தெரியாதா?
அந்தப்படியே ஆவியானவர் உந்தனுக்காய் எந்நாளும்
வாக்குக்கடங்கா பெருமூச்சோடு
வேண்டிக்கொள்வார் புரியாதா?

உன்னை முன் குறித்தேன் பின்பு அழைத்தேன்
நீதிமானாக்குவேன்
என்னோடு இணைத்து மகிமை கொடுத்து
தேவ சாயலாக்குவேன்
நான் உந்தன் கூடவே இருக்கின்ற போதிலே
வேறெந்த ஆயுதம் வாய்க்காதே போகுமே

## 22

**என் சமூகம் உனக்கு முன்பாய்ச் செல்லும்**
நம்பிக்கையோடே கடந்து போ
நீ செய்கிறதெல்லாம் வாய்க்கச் செய்வேன்
தொடர்ந்து நீயும் போராடு-2
பார்வோன் சேனைகளா-இல்லை
பரந்த செங்கடலா-2

பச்சைப்புழுக்களும் வெட்டுக்கிளிகளும்
மென்று தின்ற வருடம்-இனி
இரட்டிப்பாகவே நன்மை கிடைத்திடும்
இனியும் இல்லை வருத்தம்-2
நான் உன்னோடு நடந்திடும்போது
ஒரு நன்மையும் குறைவுபடாது
வாடும் வயல் வெளியா-இல்லை
வறண்ட பூமிகளா?

உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை
உன்னில் பழுது இல்லை-நான்
உந்தன் நோய்களை சுமந்து தீர்த்ததால்;
உனக்குள் வியாதி இல்லை-2
உன் சுகத்தினை விரும்புகிறேனே
அவன் நுகத்தினை முறித்திடுவேனே-2
வியாதியின் கொடுமைகளா-இல்லை
வேதனைத் தழும்புகளா?

உன்னைக் கெடுத்திடும் உலகம் கொடுத்திடும்
ஒன்றும் தேவையில்லை-நான்
என்னைக் கொடுத்து உன் உயிரை மீட்டதால்
உனக்கு கவலை இல்லை-2
ஒரு நதி போல் உன் சமாதானம்
உன் எல்லையில் பாய்ந்திடச்செய்வேன்
எரிகிற சூளைகளா-இல்லை
எதிரியின் சூழ்ச்சிகளா?

சேஷ்டபுத்திரன் பிரியமானவன்
விசேஷித்தவன் நீ-நான்
பாதை காட்டிட பரிந்து பேசிட
தெரிந்து கொண்டவன் நீ
என் இதயத்துக்கேற்றவன் நீயே
என் ஆடுகளை மேய்ப்பாயே
இனியும் கவலைகளா-இல்லை
இருளின் கிரியைகளா?

## 23

**என் தாயும் அவரே என் தந்தை அவரே,**
எந்த நொடியினிலும் நான்
வாழ்ந்திடும் வாழ்க்கையின் வழிகள் கர்த்தரே
என் ஆறுதல் அவரே என் அடைக்கலம் அவரே
இந்த உடலதில் இயங்கிடும்,
உறுப்பதை இயக்கிடும் ஜீவனும் கர்த்தரே

நினைத்து நினைத்து மகிழ்ந்திடும்
நெஞ்சமெல்லாம் இனித்திடும்
அணைத்து அணைத்து காத்திடும்
அன்பு தேவனே ஸ்தோத்திரம்

ஒளியாக நின்று கொண்டு உலகாளும் விந்தை என்ன
எனையாளும்போது மட்டும் எனக்குள்ளே இனிப்பதென்ன..
இதயத்தை நனைப்பதென்ன
விண்ணாளும் எங்கள் தெய்வம் மண்ணோக்கி பார்த்ததென்ன
கண்ணான உயிர்களுக்கு மூச்சாக நுழைந்ததென்ன
முடிவே உம் எல்லை என்ன
நான் வந்த நாள் முதல் என்னுள்ளே இருந்தவர்
என் ஆவி பிரிந்ததும் தன்னோடு அணைப்பவர்
இது போல எங்கள் சொந்தம் இணையாக ஏதும் இல்லை
நான்தானே கர்த்தர்க்கென்றும் மாறாத செல்லப்பிள்ளை

உம் பார்வை எந்தன்மீது பட்டாலும் பட்டதென்ன
என் துக்கம் எங்கோ சென்று ஓடோடி ஒளிந்ததென்ன
உண்மையில் நடந்ததென்ன விலையேறப்பெற்ற அன்பில்
நான் இன்று திளைப்பதென்ன
விலகாத சொந்தம் கண்டு வியப்பாகி நின்றதென்ன
விழி நீரில் கரைந்ததென்ன
நான் உந்தன் பிள்ளையாய் வாழ்கின்ற போதிலே
வேறென்ன வேண்டுமோ ஐயா என் வாழ்விலே
எனக்காக ரத்தம் சிந்தி எனை மீட்ட இயேசுவே
உமக்காக சித்தம் செய்து வாழ்வேன் என் தேவனே

## 24

**என் இயேசு ராஜனே எங்களின் தேவனே**
எத்தனை மகத்துவம் உந்தனிலே
மன்னவர் இயெசுவே மாசில்லா ராஜனே
மகிமை நிறைந்த எந்தன் மன்னவரே

ஒத்தாசை அனுப்பி உறங்காமல் காக்கும்
உயர்வான தேவனுக்கு மகிமை
உண்மையில் என்னை உம்பக்கம் இழுக்கும்
உன்னத ராஜனின் கிருபை

இரக்கம் கருணையினால் உம் பக்கம் வந்தேன்
இதற்கு ஈடாக நான் என்ன தருவேன்

உலகத்தை மீட்க ஒரு ஜீவன் தந்த
உயர்வான இயேசுவுக்கு மகிமை
விலையேறப்பெற்ற உம் இரத்தத்தாலே
விடுவித்த ராஜனின் கிருபை
உம்மைப்போல ஒரு தெய்வம் இல்லை
தேடிப்பார்த்தாலும் தென்படவில்லை

தெய்வீக அன்பை எனக்குள்ளே ஊற்றும்
பரிசுத்த ஆவிக்கு மகிமை
வலக்கரத்தை நீட்டி வல்லமையைக்கூட்டி
அடியேனைத்தொடுகின்ற கிருபை
ஆவியின் வரங்களினால் என்னை நிரப்பும்
கனிகள் கொடுக்கும் நல்ல சாட்சியாய் மாற்றும்

## 25

**எங்கள் அன்பின் பரலோக தகப்பனே**
என்னை ஆளும் என் தெய்வ ராஜனே
நீர் போதும் என் வாழ்வில் நீரே போதுமே-2

யெகோவாயீரே எல்லாம் பார்த்துக்கொள்வீரே
யெகோவாயீரே பார்த்துக்கொள்வீரே
போதும் போதுமே நீர் போதும் போதுமே-2

யெகோவா ரப்பா சுகம் தரும் தேவன்
போதும் போதுமே நீரே போதும் போதுமே-2
நீர் போதும் என் வாழ்வில் நீரே போதுமே-2

யெகோவாநிசியே எங்கள் ஜெயக்கொடியே
யெகோவாநிசியே எங்கள் ஜெயக்கொடியே

போதும் போதுமே நீர் போதும் போதுமே-2

யெகோவாரூவா எங்கள் நல்ல மேய்ப்பர்
போதும் போதுமே நீரே போதும் போதுமே-2
நீர் போதும் என் வாழ்வில் நீரே போதுமே-2

யெகோவாஷம்மா கூட இருக்கிறீர்
யெகோவாஷம்மா கூட இருக்கிறீர்
போதும் போதுமே நீர் போதும் போதுமே-2

யெகோவா ஷாலோம் சமாதானமே
போதும் போதுமே நீரே போதும் போதுமே-2
நீர் போதும் என் வாழ்வில் நீரே போதுமே-2

எல்ரோயீ என்னை காண்கிற தேவன்
எல்ரோயீ என்னை காண்கிற தேவன்
போதும் போதுமே நீர் போதும் போதுமே-2

எல்ஷடாய் சர்வ வல்லமையுள்ளவர்
போதும் போதுமே நீரே போதும் போதுமே-2
நீர் போதும் என் வாழ்வில் நீரே போதுமே-2

## 26

**எங்கள் அன்புத் தகப்பனே உம்மையல்லாமல்**
வேறே யார் எனக்கு கைகொடுக்கத்தக்கவர் உண்டு
நித்யஜீவ வசனங்கள் உமக்குள் உண்டே
வேறே யாரிடத்தில் எங்கே போவோம் உம்மைத்தவிர
இயேசுவே என் அடைக்கலம்
இயேசு கிறிஸ்துவே என் துருகம்;

அற்புதங்களைக் கண்டதால் உம்மிடத்தில் வரவில்லை
அப்பங்களின் திருப்தியால் உம்மிடத்தில் சேரவில்லை

அன்பு செலுத்த வந்தோம் அன்பான இயேசுவே
அற்பவிசுவாசியென்னை அணைத்துக்கொள்ளும்
உம்மை நோக்கிப் பார்க்கிறோம் உமதன்பிலே மகிழ்கிறோம்

இடுக்கத்தின் வாசல் என்று ஏற்கனவே சொல்லிவிட்டீர்
பாடுகளின் வழி என்று மாதிரியைக் காண்பித்திட்டீர்
பாடங்களைக் கற்றுக்கொண்டோம் பரிசுத்த ஆவியே
பாதைமாறிப்போகாமலே பாரத்துக்கொள்ளும்
பயத்தோடே நடக்கனும் பரிசுத்தமாய் வாழனும்

அனுதினம் சிலுவையை எடுத்திடப் பழக்கிடும்
அங்குமிங்கும் அலைகிற சிந்தையைச் சீர்படுத்தும்
சொந்தமென்று உம்மைமட்டும் நம்பிவந்தோம் தேவனே
இந்தமுறையும் எங்களை மன்னித்தருளும்
உந்தன் பாதத்தில் அமர்ந்திடும்
நல்ல பங்கெனக்கும் தந்திடும்

சிட்சைகளும் சோதனையும் அற்பமாய் நினைக்கவில்லை
நீர் கொடுத்த பாத்திரத்தில் பானம் பண்ணத் தடையில்லை
இவ்விதமாய் கிறிஸ்துவை கற்றுக்கொள்ளவில்லையே
எவ்விதத்திலேயும் எம்மை ஏற்றுக்கொள்ளும்
எங்கள் குறைகளும் குற்றங்களும்
உந்தன் கிருபையால் மூடிவிடும்

## 27

**எங்கள் தேவாதி தேவனே ராஜாதி ராஜனே**
என்னை ஆளவாரும்
எங்கள் மன்னாதி மன்னவரே மகிமை நிறைந்தவரே
மன்னா எனக்கு தாரும்
வருத்தப் பட்டு பாரம் சுமக்கிறேன் வழியில்லாமல்
நானும் தவிக்கிறேன்
வந்தருள வேண்டும் தேவனே தந்தருளும் தேவ ஆவியே

காற்றும் கடலும் கையை நீட்டி
அடக்கி வைத்தவர் நீரல்லவோ
கடலைப் பிளந்து உலர்ந்த தரையில்
நடக்க செய்தவர் நீரல்லவோ
ஊற்றைப் பிளந்து உமது ஜனத்தின்
தாகம் தீர்த்தவர் நீரல்லவோ
ஆற்றைக் கடந்து அக்கரைக்கு
அழைத்துச் சென்றவர் நீரல்லவோ
சேற்றில் இருந்த என்னைத் தூக்கினீர்
ஆற்றித்தேற்றி அரவணைக்கிறீர்
மாற்று வஸ்திரம் தந்த தெய்வமே
ஊற்றும் உந்தன் தேவ ஆவியே

கோடிக்கணக்கில் செல்வம் இருந்தும்
தேடி வந்தவர்க்கீடாகுமோ
மாடி வீட்டில் மகிழ்ந்திருந்தும்
மன்னவர் சமூகம் போலாகுமோ
ஓடி ஓடி உழைத்துப் பார்த்தும் உன்னத நன்மைக்கீடாகுமோ
நாடி வந்த சொந்தமெல்லாம்
நல்ல தேவனைப் போலாகுமோ
ஆடி அடங்கி வந்திருக்கிறேன்
நாடி நரம்பில் ஜீவன் வேண்டுமே
வாடி வதங்கி சோர்ந்திருக்கிறேன்
பாடிப் பரவசமாக வேண்டுமே

உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை
உந்தன் வல்லமை இறங்கட்டுமே
உறங்கிக் கிடக்கும் உலர்ந்த எலும்புகள்
உயிரடைந்து எழும்பட்டுமே
இயேசு என்னும் நாமம் மாத்திரம்
இதயம் முழுவதும் ஒலிக்கட்டுமே
பேசும் தேவனின் வாக்குத்தத்தம்

ஒன்றுவிடாமல் பலிக்கட்டுமே
பரத்திலிருந்து கரத்தை நீட்டுமே
வரத்தினால் புது பெலத்தை தாருமே
மறத்துப்போன எல்லை யாவுமே
மறுபடியும் உயிர்க்க வேண்டுமே

ஆவி முழுதும் அனலாய் மாறி
அக்கினிக் காற்று வீசட்டுமே
நாவின் கட்டுகள் அறுக்கப்பட்டு
அந்நிய பாஷை பேசட்டுமே
நோயும் பேயும் நொடிப்பொழுதில்
நொறுங்கிச் சிதறி ஓடட்டுமே
வாயும் வயிறும் வல்ல தேவனை
வணங்கி துதித்து பாடட்டுமே
தாயும் தகப்பனும் ஆன தெய்வமே
தாங்கி நடத்தும் அன்பு தெய்வமே
ஏங்கித்தவிக்கும் எங்கள் உள்ளத்தில்
என்றும் தங்கி ஆளும் தெய்வமே

## 28

**என்னை ஆளும் எந்தன் தேவனே**
மன்னில் வந்த எந்தன் ராஜனே
கண்ணின்மணியாக என்னை காத்திடும் என் தேவனுக்கு
கோடி கோடி ஸ்தோத்திரமே-2

ஜீவனுள்ள தேவனுக்கு கோடி கோடி ஸ்தோத்திரத்தை
இன்றும் என்றும் ஏறெடுக்க வாருங்கள்
மன்னாதி மன்னனுக்கு மகத்துவ ராஜனுக்கு
மகிமையை செலுத்திட வாருங்கள்

பரலோக ராஜனுக்கு பரிசுத்த தேவனுக்கு
பணிவிடை செய்திட வாருங்கள்
பசும்புல் மெய்ச்சலிலே நித்தமும் வழிநடத்தும்

சத்திய தேவனையே பாடுங்கள்

வெண்கல கதவுகளை இரும்பு தாழ்ப்பாள்களை
முறித்த நம் தேவனுக்கு ஸ்தோத்திரம்
அந்தகார இருள் நீக்கும் அற்புத ஒளிகொடுக்கும்
அநாதி தேவனுக்கு ஸ்தோத்திரம்

கோணலான பாதைகளை செவ்வையாக்கி நடத்திடும்
தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம்
பேர் சொல்லி எனை மீட்ட பெருமையை தந்துவிட்ட
பார்போற்றும் ராஜனுக்கு ஸ்தோத்திரம்

பூமியும் அதின் நிறைவும் கர்த்தருக்கு சொந்தமென்று
கைகளை தட்டி தட்டி பாடுங்கள்
அவர் இரக்கமும் கிருபையும் நமக்கு சொந்தமென்று
சந்தோஷ ஊஞ்சலிலே ஆடுங்கள்

கர்த்தர் அவர் ராஜரீகம் செய்கிறார் என்று சொல்லி
கரங்களை உயர்த்தியே பாடுங்கள்
கன்;மலை வெடிப்பில் வைத்து கரத்தால் மூடுகின்ற
கர்த்தரின் சமூகத்தையே நாடுங்கள்

## 29

**என்னை இதுவரைக்கும் பத்திரமாய்**
அழைத்து வந்த இயேசுவுக்கு
துதிகன மகிமை என்றென்றும் அவருக்கு மேன்மை

அவர் ஆதிமுதல் அந்தம் வரை செய்து வரும் கிரியைகளை
சொல்லி முடியாது வார்த்தையில் சொல்லி முடியாது
அவர் நீதி செய்ய எழும்பும்போது
ஒருவருமே அவர்க்கு முன்னால்
நிற்க முடியாது ஒருவரும் நிற்க முடியாது

என்னைப் பெலப்படுத்தும் கிறிஸ்துவினால்
எல்லாவற்றையும் செய்ய எனக்கு நிச்சயம் பெலனுண்டு
இயேசுவின் நாமத்தில் பெலனுண்டு

அவர் ஆறுதலின் வார்த்தைகளும்
அன்பைக் காட்டும் சாட்சிகளும்
எண்ணி முடியாது கணக்கினில் எண்ணி முடியாது
உயிரோடிருக்கும் நாள் வரைக்கும்
அவர் மனதில் இடம்பிடிக்கும்
விருப்பத்தைத் தவிர என்ன உண்டு வேறெதும் கேட்டிட

ஒரு நொடிப்பொழுதும் விட்டுவிடாமல்
வழி தவறி கெட்டுவிடாமல்;
காக்கிற தேவனவர் அன்பை எதிர்பார்க்கிற தேவனவர்

எந்த தீங்கும் என்னை துக்கப்படுத்தவும்
சோதனையில் சிக்கித்தவிக்கவும்
என்றுமே விட்டதில்லை
அவரை நம்பினோர் கெட்டதில்லை
அவர் நல்லது கெட்டது சொல்லிக்கொடுத்து நன்மையை
மட்டும் அள்ளிக்கொடுத்து அரவணைக்கிறவர்
அன்பாக ஆசீர்வதிக்கிறவர்.

நான் நினைப்பதற்கும் வேண்டுவதற்கும்
மிக அதிகமாய் கிரியைசெய்கிற
இயேசுவின் வல்லமை எனக்கது நித்திய வல்லமை

அவர் வார்த்தைகளுக்கு செவி கொடுக்கவும்
கற்பனைகளுக்கு கீழ்ப்படியவும்
என்னைத்தடை செய்ய எந்த எதிர் வல்லமையும் இல்ல
என் சேனைகளின் கர்த்தர் நாமம் தரித்ததினால்
இன்று நானும் கர்த்தரையுடையவன்
என்றும் நான் கர்த்தருடையவன்

## 30

**எந்நாளும் என்னை நடத்துகிற இயேசு கிறிஸ்து**
எங்க இயேசு கிறிஸ்து-அவர்
பொன்னான அடி பின்னாலதான் பாசம் இருக்கு
சந்தோஷம் இருக்கு
இது எந்த கட்டுக் கதையும் இல்லீங்க
உங்க கட்ட அறுக்க வழியைச் சொல்றேங்க-

மண்ணால பொறந்த நாமும் மண்ணுக்குள்ள போனதுக்கு
பின்னால எங்க போவ தெரியுமா
அத சொன்னாலும் உனக்கு இப்ப புரியுமா-2
ஆணானாலும் பெண்ணானாலும்  ஐயா கிட்ட வரணுமே
இயேசு ஐயா கிட்ட வரணுமே
ஆனாலும் இங்க வாழ்ந்ததுக்கு மொத்த கணக்கு தரணுமே
மொத்த கணக்கு தரணுமே
இதல எந்த மாத்து வழியும் இல்லீங்க
உங்க மனசு மாற வழியைச் சொல்றேங்க

உன்னால ஒரு பலனும் இல்லையின்னு தெரிஞ்சிருந்தும்
உம் பின்னால இயேசு வராரு ஏனப்பா
அது உம்மேல வச்ச அன்புதானப்பா
உனக்காக தன்ன கொடுத்த இயேசு என்னும் தேவரு
அவர் இயேசு என்னும் தேவரு
எப்போதுமே கூட இருக்கும் எங்க இம்மானுவேலரு
எங்க இம்மானுவேலரு
அந்த இயேசுவப்போல சாமி இல்லீங்க
அவர் இல்லேன்னா இந்த பூமி இல்லீங்க

நல்லாதான் போகுதுன்னு நமக்கெதுக்கு இயேசுவுன்னு
எல்லாமே தெரிஞ்சதுபோல சொல்லாதே
உன் ஆத்துமாவ நீயே உடைச்சி கொல்லாத
நாசியில சுவாசமுள்ள மனுஷன நீ நம்பாதே

மனுஷன நீ நம்பாதே
ஓசியில இயேசு கொடுக்கும் ரட்சிப்ப நீ தள்ளாதே
ரட்சிப்ப நீ தள்ளாதே
இன்னைக்கு உன்ன மாத்தும் சக்தி யாருங்க
நம்ம இயேசுவ விட்டா வேற யாருங்க

## 31

**என்னுயிரானவரே எங்கள் இயேசு ராஜாவே**
தன்னுயிர் தந்து என்னை இன்று உம்முடன் அழைத்தவரே
உம் இரக்கமும் கிருபையும் நிம்மதி தருதே நீரே பரிசுத்தரே
ஐயா நீரே பரிசுத்தரே

வானம் ஒழிந்து போனாலும்
உம் வார்த்தை ஒழிந்து போகாது
ஞானம் என்பது உமக்கென்று நான்
பயப்படும் பயம் என்றும் குறையாது
உம் கண்கள் என்மீது நோக்கமாய் இருந்து
என் வழிகளை செவ்வைப்படுத்தும்
என் வழிகளை செவ்வைப்படுத்தும்..

உம் சாயலில் மாறிட வேண்டுமய்யா,
உம் விருப்பம் மாத்திரம் நடத்துமய்யா
என் மாமிச கிரியைகள் மறைந்திடட்டும்,
புது ஆவியின் கனி மட்டும் நிலைத்திடட்டும்
இயேசு கிருஸ்துவுக்குள் புது சிருஷ்டியாய் மாறிட
மறுரூபப்படுத்துமய்யா என் மன்றாட்டைக் கேளுமய்யா..

உம் வல்லமை எனக்கின்று ஊற்றுமைய்யா
உம் வரங்களினால் என்னை நிரப்புமைய்யா
புது பெலன் என்னை முழுவதும் நிரப்பிடட்டும்
உம் மகிமை எனைச்சுற்றி வெளிப்படட்டும்
என் இருதயம் உமக்குள்ளே களிகூர்ந்திடுதே
புது வித அனுபவமாய்
என் உணர்வுகள் புது சுகமாய்

## 32

**எந்த பொல்லாத வல்லமையும்**
இல்லாமல் போகட்டும்
எல்லாம் வல்ல இயேசு நாமத்தினால்
அவை சொல்லாமல் கொள்ளாமல்
நில்லாமல் ஓடட்டும்
எல்லாம் வல்ல இயேசு நாமத்தினால்

சோதிக்க நினைக்கும் சாத்தானுக்கெதிராய்
சாதிக்கத் தூண்டும் என் இயேசு கிறிஸ்துவின்
வல்லமை இறங்கட்டும்-வல்லமை இறங்கட்டும்
எத்தனை எதிரிகள் எழும்பி நின்றாலும்
அத்தனையும் சுக்கு நூறாக்கிப்போடும்
அக்கினி இறங்கட்டும்-அக்கினி இறங்கட்டும்

இயேசென்று சொன்னாலே நடுங்கட்டும்
பின்னாலே ஒதுங்கட்டும்
எந்நாளும் எதிரிக்கு ஏமாற்றமாய்
அவர் முன்னாலே நிற்காமல் தன்னாலே சிதறட்டும்
இந்நாளில் இந்த ஜெயம் இயேசுவுக்காய்

நீர் நிலம் காற்று ஆகாயம் நெருப்பு
அத்தனையும் அது ஆண்டவரின் படைப்பு
என்னோடு இணையட்டும்-என்னோடு இணையட்டும்
சூரிய சந்திர நட்சத்திரங்களெல்லாம்
ஓரிணையாக என்னோடு இணைந்து
யுத்தங்கள் புரியட்டும்-யுத்தங்கள் புரியட்டும்

இயேசு இல்லாத ஒரு இடம்
இல்லாமல் போகட்டும்
எல்லா இடமும் இயேசு ஆளுகைக்காய்
அவர் சொல்லாத ஒரு மொழி செல்லாமல் போகட்டும்
அல்லேலூயா மட்டும் தேவனுக்காய்

ஆகாய மண்டலப் பொல்லாத சேனைகள்
வானத்தில் இருந்து மின்னலைப்போல
விழுந்து நொறுங்கட்டும்-விழுந்து நொறுங்கட்டும்
பரத்திலிருந்து ஒத்தாசை இறங்கி
துரைத்தனம் பண்ணும் சத்துருவின் சேனையை
துரத்தி அடிக்கட்டும்-துரத்தி அடிக்கட்டும்

அந்தப் பொல்லாங்கன் எய்திடும்
எல்லா அஸ்திரங்களும் வாய்க்காமல்
அவன் பக்கம் திரும்பட்டுமே
எங்கள் போராயுதம் மாம்சம் இல்லாததால்
தேவ சர்வாயுதம் என்னை மூடட்டுமே

## 33

1. **இச்சையான யாதொன்றையும்** பார்க்காமல் இருக்கவே
பரிசுத்த கண்களைத் தாருமைய்யா-(தாருமைய்யா-2)

2. கொச்சையான மொழிஒன்றும் பேசாமல் இருக்கவே
தூய்மையான உதடுகளைத் தாருமைய்யா-
(தாருமைய்யா-2)

3. தீமையான ஒலிஒன்றும் கேட்காமல் இருக்கவே
தேவைக்காக செவிகளைத் திறவுமய்யா-(திறவுமய்யா-2)

4. நுகர்கின்ற வாசனையும் நினைக்கின்ற யோசனையும்
உம் மகிமைக்காய் இருக்க வேண்டுமய்யா-
(வேண்டுமய்யா-2)

5. சடிதியான கிலி ஒன்றும் பிடிக்காமல் இருக்கவே
பலமுள்ள இருதயத்தை தாருமைய்யா-(தாருமைய்யா-2)

6. நொடிப்பொழுதும் உம்மைவிட்டு பிரியாமல் இருக்கவே

நேசமுள்ள நெஞ்சமதைத் தாருமைய்யா-
(தாருமைய்யா-2)

7. எத்தனையோ சூழ்நிலைகள் எதிர்எதிராய் வந்தாலும்
அத்தனைக்கும் விலகிட வேண்டுமய்யா-
(வேண்டுமய்யா-2)

8. சிந்தனையும் நடத்தையும்
எண்ணங்களும் உணர்வுகளும்
தேவபிரியமாய் இருக்க வேண்டுமய்யா-
(வேண்டுமய்யா-2)

9. அதிகாலை நேரத்தோடு ஆத்தும பாரத்தோடு
அனுதினமும் ஜெபித்திட வேண்டுமய்யா-
(வேண்டுமய்யா-2)

10. ஆவியின் கனிகளும் ஆவியின் வரங்களும்
அதிகதிகமாய் என்னில் நிரப்புமய்யா-(நிரப்புமய்யா-2)

11. உண்மையும் உத்தமுமாய் உம்வழியெல்லாம் நடக்க
கர்த்தருக்குப் பயப்பட வேண்டுமய்யா-(வேண்டுமய்யா-2)

12. சுத்தமுள்ள தேவனே நித்தமும் காப்பவரே
மொத்தத்தில் உம்சாயல் வேண்டுமய்யா-
(வேண்டுமய்யா-2)

## 34

**இந்த நல்ல நாளைக் காணச் செய்தீரே**
உமக்கு நன்றி நன்றி நன்றி ஐயா
இந்த நாள் முழுக்க என்னோடு வரப்போகிறீர்
உமக்கு நன்றி நன்றி நன்றி ஐயா

உங்க கையக் குடுங்க நான் பிடிச்சிக்கிறேன்

உங்க பாதத்த காட்டுங்க பணிஞ்சிக்கிறேன்-2

பொல்லாத உலகம் புரிஞ்சுக்க முடியல
(போக்கிலும் வரத்திலும் கூட வாங்க)-2
நான் மாறும்படி உம்மில் சேரும்படி
உமக்குள் தேறும்படி நீங்க கூட வாங்க
உங்க ஆசப்படி நான் நடக்கும்படி
எனக்கு பாதை காட்ட கூட வாங்க
எனக்கு பாதுகாப்பா வந்திடுங்க

எவனை விழுங்கலாம் என்று வகை தேடும்
(பிசாசை நொறுக்க கூட வாங்க)-2
ஜெபத்தில் முட்டிபோட்டு எதிரியை கட்டிப்போட்டு
ஜெயத்த பெற்றுக்கொள்ள நீங்க கூட வாங்க
நீங்க வந்தாலுமே எதிரிய பந்தாடுவேன்
எனக்கு உதவி செய்ய கூட வாங்க
எந்த உபத்திரவத்திலும் கூட நில்லுங்க

உங்க சமூகம் என்னோட கூட வந்தா
(விசேஷித்தவரா மாறுவேனுங்க)-2
இளைப்பாறும்படி களைப்பு தீரும்படி
கோணல் மாறும்படி நீங்க கூட வாங்க
உங்க நேசத்துக்கும் பெரிய பாசத்துக்கும்
உரிய பங்கைக் கொடுக்க கூட வாங்க
உங்க பாதம் எனக்கு போதுமுங்க

நான் போகும் வழியை அறிந்தவர் ஆதலால்
(முன்னாலும் பின்னாலும் நெருக்கி நில்லும்)-2
உமது விருப்பப்படி என்னைத் திருப்பும்படி
நான் பணியும்படி நீங்க கூட வாங்க
நீர் சொன்னபடி கேட்டுச் செய்யும்படி
என் வழிகளுக்கெல்லாம் அதிகாரி நீங்க
வாழும் வழி காட்ட வந்திடுவீங்க

## 35

**இன்னும் உறக்கத்தில் சென்றாயோ**
அந்த நேரத்தில் என்னை நீ மறந்தாயோ
நான் உறங்குவதும் இல்லையே
உனக்காய் தூங்குவதும் இல்லையே-2

அதிகாலை நேரத்தில் பரம அதிகாரம் கொடுக்கவே
ஆத்தும பாரத்தில் நான் ஆர்வமாய் வருகையில்-2
இன்னும் விழிக்கவில்லை எழுப்ப மனமுமில்லை
எந்தன் ஏக்கம் உன்னில் புரியவில்லை-2
உன்னைக் காத்திடும் தேவனை
நீ காத்திட வைப்பதேன்-2

தீட்டிய பட்டயம் அது உறையிலே கிடக்குது
வழி காட்டிய வேதமும் உள்ளறையிலே இருக்குது-2
உன்னில் ஜெபமுமில்லை உறக்கம் கலையவில்லை
என்னை நினைத்திடவும் நேரமில்லை-2
அந்த சிலுவையின் வேதனை
என்னை மறுபடி நெருக்குதே-2

காகிதப்பூக்களாய் நீ கசங்கியே போவதேன்;
காலத்தில் பாதியை நீ தூங்கியே கழிப்பதேன்-2
இன்னும் உறக்கமென்ன எழும்ப தயக்கமென்ன
இப்படி வாழ்கிறதில் அர்த்தமென்ன-
நீ படுத்துத் தூங்கவா
என்னைக் கொடுத்துத் தாங்கினேன்-2

நித்திரை செய்கையில் அந்த சத்துரு வருகிறான்
உன் சத்துவம் குலையவே பெரும் வேதனை தருகிறான்-2
இனியும் வார்த்தையில்லை துளியும் நேரமில்லை
எழும்பு என்மகனே எழுந்துவிடு-2
உன் ஒருவனைக் கொண்டுதான்
அந்த பகைவனைத் துரத்துவேன்-2

## 36

**கல்வாரி சிலுவையில் நான் சிந்தின இரத்தம்**
கண் முன்னே ஓடவில்லையா
நீ கண்மூடித்தனமாய் வாழ்ந்திடும்
வாழ்க்கையால் வேதனைகள் கூடவில்லையா
முன்னாளில் நீ செய்த பாவத்தினால்தான்
நான் மரித்தேன் நினைவில்லையா
இந்நாளில் நீ இன்று பின் மாற்றம் அடைந்திட
நான் உனக்கு பிடிக்கவில்லையா

பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைத்து
நித்தியத்தை நீ அடைய வேண்டும் என்று
சிலுவையைச் சகித்தேன் நிந்தைகளைச் சுமந்தேன்
அத்தனையும் மறந்தாய் நீயோ இன்று
எங்கோ பிறந்த உன்னை
என் மடியில் நான் வளர்த்தேன்
எடுத்தெறிந்து போனதென்ன
இப்போதும் உன்க்காய் காத்திருக்கும்
தகப்பனை நினையாமல் வாழ்வதென்ன

தோள்வலிகள் எடுக்க கால் பாதம் கடுக்க
கல்வாரி நோக்கி நான் நடந்த போது
உன் முகத்தை நினைத்தேன் உபத்திரவம் பொறுத்தேன்
உயிர் போகும் வரையிலும் ஒப்புக்கொடுத்தேன்
ஆனாலும் நீ இன்று வீணாக
மரித்திடவா நான் சிலுவை சுமந்தேன்
காணாமல் போயிருந்த ஆடான
உன்னைக்கண்டு ஓடோடி வந்து நிற்கிறேன்

ஆரம்பத்தில் கொண்டிருந்த நம்பிக்கையை நீ இழந்து
போர் முகத்தில் தோற்றதென்ன
நான் கொடுத்த வெற்றிகளை நீ கெடுத்துப் போட்டு
தேவன் மேல் தாங்கலென்ன

இஸ்ரவேலில் தேவனவர் இல்லையென்று நீ நினைத்தா
இங்கும் அங்கும் ஓடுகிறாய்
ஏராள மன்னிப்பை தாராளமாய் கொடுப்பேன்
இன்னும் ஏன் தயங்குகிறாய்.

இருப்பதோ ஒரு வாழ்க்கை
இனியில்லை மறு வாழ்க்கை
இப்பொழுதே திருந்திவிடு
இருந்தாலும் இறந்தாலும்
இயேசுதான் நிரந்தரம்
இதற்கென்று ஒப்புக்கொடு

## 37

**கல்வாரி சிலுவையில் நீர் சிந்தின இரத்தம்**
கண் முன்னே ஓடுகின்றதே
நான் கண்மூடிக்கொண்டு அந்த காலத்தை
நினைக்கையில் என் ஏக்கம் கூடுகின்றதே
முன்னாளில் நான் செய்த பாவத்தினால்தான்
நீர் மரித்தீர் என்று உணர்ந்தேன்
இந்நாளில் நான் இன்னும் உம்மோடு இசைந்திட
ஓடோடி வந்து நிற்கிறேன்

பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைத்து
நித்தியத்தை நான் அடைய வேண்டும் என்று
நிந்தைகளைச் சகித்தீர் சிலுவையைச் சுமந்தீர்
அத்தனையும் நினைக்கின்றேன் நானோ இன்று
ஆனாலும் நீர் அன்று தானாக முன் வந்து
எனை மீட்க மறந்திருந்தால்
காணாமல் போயிருப்பேன் வீணாய் மரித்திருப்பேன்
ஏனோ நீர் என்னை நினைத்தீர்

தோள்வலிகள் எடுக்க கால் பாதம் கடுக்க
கல்வாரி நோக்கி நீர் நடந்த போது
என் முகத்தை நினைத்தீர் உபத்திரவம் பொறுத்தீர்
உயிர் போகும் வரையிலும் ஒப்புக்கொடுத்தீர்
எங்கோ பிறந்த என்னை எடுத்தெறிந்து போடாமல்
உயிர் கொடுத்து வளர்த்தவரே
இங்கேயும் எனக்காய் காத்திருக்கும் இயேசுவை
தலைகுனிந்து பணிந்து கொள்வேன்

## 38

**கானானுக்குள் நுழைய வேண்டுமா**
முறுமுறுப்பைக் கழட்டி போடுங்க
எரிகோவ இடிக்க வேணுமா
ஏழுதரம் சுத்த பழகுங்க (2)
யோர்தான் நதி தாண்டி போக வேணுன்னா
உனக்கு முன்னால இயேசப்பாதான் போணும்
செங்கடல் ரெண்டாக பிளக்க வேணுன்னா
உங்க கையில விசுவாசக்கோல் வேணும்

இப்படியும் அப்படியும் அலையுற மனசுல
எப்படியும் இயேசப்பா வந்து தங்க மாட்டாரு
குப்பையும் கூளமா இருக்கிற நெனப்புல
கும்பிடுதான் போட்டாலும் குரல் கேட்க மாட்டாரு
கர்த்தரோடு கைகோர்த்து நடக்கணுமா
அவர் வரும்போது வெட்கப்பட்டு ஓட வேணுமா
அற்புதமா பரலோக வீடு வேணுமா-இல்ல
எரிகிற அக்கினிக் கடல் வேணுமா
மரணமும் ஜீவனும் உன் கையில் இருக்குது
உலகமோ உன்ன தம்பக்கம் இழுக்குது
எத்தனையோ ஆசிகள் பரலோகில் கிடக்குது
இருந்தாலும் உம்மனசு ஏன் இங்கே மயங்குது
காரணம் என்னன்னு கண்டு பிடிச்சாலும்

கைய கட்டிட்டு உட்கார்ந்தா போதுமா
உலக காரியத்த உன்கூட வச்சிகிட்டு
ஓயாம ஜெபிச்சா பரலோகம் திறக்குமா

கற்பனையும் கட்டளையும் மதிக்கவும் நினைக்கல
அற்புதத்த கேட்க மட்டும் கொஞ்சம்கூட சளைக்கல
கர்த்தருக்கு கீழ் படிஞ்சு நடக்கவும் தெரியல
எத்தனை முறை சொன்னாலும் ஏன் இன்னும் விளங்கல
கர்த்தருக்குள் எப்போதும் சிரிக்கணுமா-இல்ல
கன்னத்துல கையவச்சு புலம்பணுமா
கிறுக்குள்ள இருதயத்த திருப்பனுமா-இல்ல
கறுக்குள்ள பட்டயம்தான் இறங்கனுமா
கசப்பும் வெறுப்பும் கைகொட்டி சிரிக்குது
காரணம் இல்லாம எரிச்சலும் நுழையுது
இயேசு இயேசென்று வாய் மட்டும் சொல்லுது
இருதயம் எல்லாமே இஷ்டப்படி நடக்குது
அப்பா அப்பான்னு அன்னாடம் சொன்னாலும்
அன்பு இல்லன்னா வேலைக்கு ஆகாது
தப்பா நடக்கிற சூழ்நிலை வந்தாலும்
உதறித் தள்ளிட்டு யோசேப்பாய் நீ மாறு

## 39

**கண்களெல்லாம் ஜொலிக்கின்றதே**
என் இயேசுவைக் காண்கையிலே
என் உள்ளமெல்லாம் பூரிக்கின்றதே
என் இயேசுவை நினைக்கையிலே
ஆபிரகாமின் தேவன் ஈசாக்கின் தேவன்
உமக்கே ஸ்தோத்திரமே
அதிசயத்தின் தேவன் அற்புதத்தின் தேவன்
உமக்கே ஸ்தோத்திரமே

யோசேப்போடு கூட இருந்த கர்த்தர்
இன்று என்னோடும் இருக்கின்றீர்
பாவச் சூழ்நிலையில் சிக்காமல் காத்து
பக்குவமாய் என்னை நடத்துகிறீர்
மாராவின் நீரை மதுரமாய் மாற்றி
மக்களின் தாகத்தை தீர்த்தவரே
மாசில்லாத உம் ஆவி ஊற்றி
எந்தன் தாகத்தை தணித்தவரே
இப்பொழுதும் எப்பொழுதும் என்னுடனே இருக்கும்
தேவனுக்கு ஸ்தோத்திரமே
உத்தமனாய் என்னை உம் வழியில் நடத்தும்
சத்தியரே ஸ்தோத்திரமே

எல்லையில்லாத அன்பினிலே என்னை
கட்டி உம் பக்கம் இழுக்கின்றீர்
தொல்லை தருகின்ற துன்பங்களை எல்லாம்
கட்டி மறு பக்கம் வீசுகிறீர்
ஆதரவென்னும் அப்பத்தின் கோலை
அன்பாய் என் பக்கம் நீட்டுகிறீர்
ஆசீர்வாதமான உம் வலது கரத்தை
நன்மையாய் என் தலையில் வைக்கின்றீர்
அப்பப்பா என்ன ஒரு சந்தோஷம் எனக்கு
ஆனந்தம் ஆனந்தமே
அப்பாவின் சந்நிதியில் அன்றாடம் துதிப்பேன்
பாக்கியம் பாக்கியமே..

உச்சந்தலை முதல் உள்ளங்கால் தொடங்கி
உந்தன் நாமம் உயர்த்திடுவேன்
இச்சை தருகின்ற எல்லைகளை சுருக்கி
உந்தன் பாதத்தில் பணிந்திடுவேன்
எதுவும் என்னாலே கூடாது ஐயா
உந்தன் கிருபை வேண்டுமைய்யா
உள்ளம் முழுவதும் உம் ஆட்சி வேண்டும்

உத்தம இருதயத்தை தாருமைய்யா
இதுவரை எனக்கு எத்தனையோ நன்மைகளை
செய்திட்ட எபினேசரே
இனிமேலும் என்னை நீர் காக்க வேண்டும்
எங்கள் யெகோவாயீரே

## 40

**கர்ப்பத்தின் கனியை ஆசீர்வதித்த**
என் கர்த்தர் இயேசுவுக்கு நன்றி
உற்பத்திப் பகுதியின் சாப வல்லமைகளை
முறித்துப்போட்டவர்க்கு நன்றி
பலுகிப்பெருகுங்கள் என்ற வார்த்தைகளை
நினைத்தப் பார்த்தவரே நன்றி
உலகில் வந்து உம்மை துதிக்க இன்னுமொரு
ஜீவனைத்தந்தீரே நன்றி

நன்றி நன்றி நன்றி-இயேசப்பா-நன்றி நன்றி நன்றி

உந்தன் கிருபையால் இந்தச்சுதந்திரம்
தந்து உயர்த்தினீர் நன்றி
இந்த மடியில் ஒரு சொந்தக்குழந்தையை
தந்த தயவிற்கு நன்றி
மலடியைச் சந்தோஷமான
பிள்ளைத் தாய்ச்சியாக்கினீரே நன்றி
மலட்டுக் கர்ப்பத்தைக் கூட
ஒரு உயிரைச் சுமக்கவைத்தீர் நன்றி

நன்றி நன்றி நன்றி-இயேசப்பா-நன்றி நன்றி நன்றி

தாய்மை அடையவைத்து தாங்கும் பெலன் கொடுத்த
தாயும் தகப்பனே நன்றி
வாயும் வயிறுமாய் வந்து நிற்பவரை

வாழ்த்தி வணங்க வைத்தீர் நன்றி
கருவில் உருவாகும் எலும்புகளை
உம் கணக்கில் வைத்தவரே நன்றி
பிரமிக்கத்தக்க விதமாய்
புது ஜீவன் உண்டாக்கினீர் நன்றி

நன்றி நன்றி நன்றி-இயேசப்பா-நன்றி நன்றி நன்றி

பெறச்செய்கிறவர் பெறப்பண்ணுகிறவர்
பெற்றெடுத்தவரே நன்றி
பிரசவிக்கப்பண்ணி பிள்ளைப் பேற்றினால்
இரட்சிக்கச் செய்தவர் நன்றி
எபிரேய ஸ்திரீகளைப் போல
பிள்ளை பெறும் பெலன் கொடுத்தீர் நன்றி
பிரசவ நேரத்தில் உமது
செவிலித்தூதரை அனுப்பினீர் நன்றி

நன்றி நன்றி நன்றி-இயேசப்பா-நன்றி நன்றி நன்றி

## 41

**கர்த்தரும் ரட்சகரும் என் மீட்பரும் சகாயரும்**
என் நங்கூரமும் என் நம்பிக்கையும்
என் தயாபரரும் என் மறைவிடமும்
என்னோடு இருக்கையிலே
எனக்கொன்றும் குறைவேயில்ல
இயேசு என்னோடு இருக்கையிலே
எனக்கு கொஞசமும் பயமேயில்ல

இல்லை இல்லை என்று சொல்லி முறுமுறுப்பேனோ
தொல்லை தொல்லை என்று சொல்லி
சலித்துக்கொள்வேனோ-2

சாத்தானின் சதிக்கெல்லாம் ஒத்துக்கொள்ளுவேனோ
சர்வவல்ல தேவனை மறுதலிப்பேனோ-2
எனக்கேதாவது ஒரு தேவை என்றால்
இயேசுராஜா இருக்க ஒரு கவலை இல்ல-2
எனக்கெல்லாமும் ஆனவரு
என்ன நல்லா நடத்துவாரு-2

எப்பொழுதும் யாரைப் பத்தி குறை சொல்லுவேனோ
தப்புதண்டா செஞ்சுப்புட்டு கைய காட்டுவேனோ-2
நெஞ்சத்தட்டி நான்மட்டுந்தான் நீதிமான்னுவேனோ
வஞ்சகத்த நெஞ்சுக்குள்ள மறைச்சி வப்பேனோ-2
எந்த கேடான சிந்தைக்கிங்கு இடமுமில்ல
என்ன போராட்டம் வந்தாலும் சளைக்கவில்ல-2
இன்னும் சந்தோஷமாய் இருப்பேன்
புது சங்கீதமா படிப்பேன்-2

சோம்பேறி நெனப்புல தூங்கி விழுவேனோ
வீம்பாக வெட்டி கதை பேசித்திரிவேனோ-2
பேராசை பேய்க்கெல்லாம் இடம் கொடுப்பேனோ
ஊராரு மெச்சிக்கத்தான் வலம் வருவேனோ-2
இந்த மண்ணான உடம்புல உசுர் இருக்கு
என்ன பண்ணாலும் அதுக்கொரு கணக்கிருக்கு-2
இத எண்ணாம போறதுக்கு
இன்னும் என்னதான் இங்க இருக்கு
என்ன கண்ணாக பார்ப்பதற்கு
இயேசு கண்ணு என் மேலிருக்கு

## 42

**கவலை கொள்ளாதிருங்கள்**
நம் கர்த்தர் பார்த்துக்கொள்வார்

தன் சொந்தக் குமாரனை தந்து விட்ட தேவனும்

மற்றதெல்லாம் நமக்கென்று தந்திட மறுப்பாரோ
குற்றம்குறை யாவற்றையும் மன்னித்திட்ட தேவனும்
குற்றவாளிக்கூண்டிலேயே உன்னை நிற்க வைப்பாரோ
எந்த நேரமும் எப்பொழுதுமே
எல்லாவற்றையுங்குறித்து
இயேசுவுக்குச் சொல்லிவிட்டு

முள்ளிருக்கும் இடத்தினில் விதைத்திட்ட வசனம்
உள்ளிருக்கும் கவலையால் பலன் தர மறுக்கும்
புல்லுக்கும் புஷ்பங்கள் சூட்டி மகிழ்ந்திட்ட தேவனின்
சொல்லுக்குக் கீழ்ப்படிய நல்வழிதான் பிறக்கும்
என்னத்தை உண்போம் எதை உடுப்போம்
என்றபடி இல்லாமல்
எந்த நாளும் சந்தோஷித்து

அவர் நம்மை விசாரிக்கும் அன்பு தெய்வம் ஆனதால்
அச்சுறுத்தும் பாரங்களை அவர் மேலே வைப்போமே
அநேகம் ஆயிரங்கள் இருந்தென்ன எப்போதும்
அவர் பாதம் அமர்வதே நல்ல பங்கு இப்போதும்
எதை நினைத்தும் எதற்காகவும்
ஏங்குவதை விட்டுவிட்டு
இயேசுவையே நம்பிக்கொண்டு

## 43

**மகனே என் மகனே உலகை வெல்வோம் வா...**
மகளே என் மகளே நீயும் பின்னே வா..
உன் வாசல் வழி முன்னே நானும் செல்வேன் வா
எந்நாளும் என் ஆசி உன்னைக் காத்திடும் வா

கலங்கிடும் இருதயம் இனி இல்லை ஒரு பயம்
கவலைகள் நீங்கிட வா
ஆறுதல் அளித்திட அடைக்கலம் கொடுத்திட

நானும் இருக்கிறேன் வா
வாழ்க்கையின் வழி முழுதும்
வந்து உனை வாழ்த்திடச் செய்திடவா
காத்திடும் கர்த்தர் முன்னே
நீயும் உந்தன் பாவத்தை பலியிட வா

நன்மையும் கிருபையும் உம்மைத்தொடரும்
உன் ஜீவனுள்ள நாட்களில் வா
உன்னையும் என்னையும் இணைத்திடும் உறவிது
உண்மையைப் புரிந்திட வா
பரிசுத்த ஆவியிலே உன்னை இன்று
நிரம்பிடச் செய்திட வா
பரலோக ராஜ்ஜியத்தில் உனக்கு என்று
இடமொன்றை ஒதுக்கினேன் வா.

உன் கரம் பிடித்திட என் கரம் நீட்டினேன்
நன்றாய் கவனித்து வா
இடுக்கத்தின் வழியே உட்பிரவேசிக்க
உலகத்தை உதறிட்டு வா
என் துணை உனக்கிருக்க
உனக்கு இன்னும் பயமென்ன நேராய் வா
என் உள்ளங்கைகளிலே உன் பெயரை
எழுதி வைத்திட்டேன் வா

## 44

**மண்ணோடு மண்ணாக என்னை எடுத்து**
அதைக் கையில் குழைத்து
ஒரு பொன்னான மனிதனாய் உருவாக்கினார்
நல்ல சிங்காரத்தோட்டமாய் ஏதேன் படைத்து
அதில் என்னையும் வைத்து
அதைப் பாதுகாத்து பண்படுத்து என்று சொல்லினார்.
அவை எல்லாமே அவர் கரத்தின் கிரியைகள்
அவர் சொல்லாலே உண்டான உயிரினங்கள்

ஆடும் மயிலும் அந்த பாடும் குயிலும்
என்னைச் சுற்றி சுற்றி வட்டமிட்டு மகிழ்ந்திருக்க
இளம் காலைப்பனியில் அந்த சோலைக்குளிரில்
எந்தன் தேவன் வந்து என்னோடு இசைந்திருக்க

எல்லா விருட்சங்களும் வளர்ந்திருக்க
நன்றாய் கனி கொடுக்க
என்னை பறித்திடு புசித்திடு என்று கூறினார்
அதேசமயம் ஒரு கனியிருக்கு அது கெட்டு இருக்கு
அதை விட்டு விடு விலகிடு என்று கூறினார்
அந்த ஆதாமைப் போல் என்னை வீழ்த்திடவே
அந்த சோதோமைப்போல என்னைக் கவிழ்த்திடவே-2
வலு சர்ப்பமும் வந்து வஞ்சனையுடன்
ஒரு திட்டமிட்டு கிட்ட வந்து ஆசை காட்ட
சர்வ வல்லமை கொண்ட எந்தன் இயேசு நாமத்தில்
அதை துரத்த துரத்த அது ஓடிப்போக...

காலோடு காலாக அடி எடுத்து
அவர் கரம் பிடித்து
அவர் சொல்லும்படி செல்லும்படி வழி நடத்தினார்
தோளோடு தோளாக என்னை அணைத்து
மெல்லத் தட்டிக் கொடுத்து
செல்லப் பிள்ளையாக்கி உள்ளமெங்கும் அன்புகூறினார்
அவர் சொல்லாமல் ஒரு செயல் செய்ததில்லை
அவர் இல்லாமல் எங்கும் என்றும் சென்றதில்லை-2
காலம் கடந்து ஒரு வாசல் அடைந்து
அது என்னவென்று ஏங்கிக்கொண்டு எட்டிப்பார்க்க
தேவ தூதரின் கரம் என்னை வரவேற்க
தேவ மகிமையின் பரலோகம் என்ன சொல்ல

## 45

**மரணப்படுக்கையில் படுத்திருந்தேன்**

என்னைத் தொட்டவரே
இன்னும் உயிரோடிருக்கிறேன்
நான் உயிரோடிருக்கிறேன்
ஓடி வந்து உம்மைத் தொட்டதினால்
பெரும்பாடு நின்றதே
இன்று சுகமாய் இருக்கிறேன்
உமது மகளாய் சிரிக்கிறேன்

உரத்த சத்தமாய் சத்தமிட்டேன்
என்னைக் கண்டவரே
இன்று உலகைக் காண்கிறேன்
உமது படைப்பைப் பார்க்கிறேன்
கைகால் வராமல் கிடத்தப் பட்டேன்
என்னை எழுப்பினீரே
இன்று எழுந்து நடக்கிறேன்
உம் பாதம் விழுந்து கிடக்கிறேன்

கல்லறைச் சங்கிலியால் கட்டப்பட்டேன்
கட்டவிழ்த்தவரே
இன்று புத்தி தெளிந்திருக்கிறேன்
புது வஸ்திரம் அணிந்திருக்கிறேன்
கொன்னைவாய்ச் செவிடாய் தவித்திருந்தேன்
தயை செய்தவரே
இன்று பேசித்துதிக்கிறேன்
வசனம் கேட்கத் துடிக்கிறேன்

அசுத்த ஆவியினால் அவதிப்பட்டேன்
என்னை விடுவித்தவரே
இன்று ஆராதிக்கிறேன்
உமது ஆவியில் நிறைகிறேன்
சூம்பின கையோடு சோர்ந்திருந்தேன்
என்னை சொஸ்தமாக்கினீர்

இன்று கைகளை அசைக்கிறேன்
இரு கரங்களைத் தட்டுகிறேன்

## 46

**நாளாகிப் போனாலும் என்ன**
வயதாகிப் போனாலும் என்ன
அழுக்கான கந்தை அணிந்தாலும் என்ன
ஆண்டவர் உன்னையும் நேசிக்கிறாரே-2

கருப்போ சிவப்போ ஆனாலும் என்ன
கூரையில் குடிசையில் வாழந்தாலும் என்ன
பட்டம் படிப்பேதும் படிக்காமல் இன்னும்
பரதேசியாய் எங்கும் திரிந்தாலும் என்ன
சொந்தங்களும் பந்தங்களும் ஒதுக்கினாலும்
உனக்கென்று ஒரு தேவன் உன்னோடுண்டு-2
இயேசுவே எல்லாம் இயேசுவே எல்லாம்

தாயவள் கருவில் உருவாகுமுன்னே
தூயவர் உன்னைத் தெரிந்து கொண்டாரே
தன் பிள்ளையாக பிரித்தெடுத்துன்னை
ஏந்தியும் சுமந்தும் தாங்கி வந்தாரே
அன்றுமுதல் இன்றுவரை கூடேநின்று
ஒன்றும் உனை அனுகாமல் தப்புவித்தார்-2
விடுதலை தந்தார் விடுதலை தந்தார்

ஆயிரம் வருடம் அரசாட்சியில்
ஆண்டவரோடு நீ வாழ்ந்திட வேண்டும்
அவரோடு கூட உன்னதங்களில்
உன்னையும் உயிர்ப்பித்து உட்கார வைப்பார்
வானம் அது பூமி அது ஒழிந்தே போகும்
ஆனாலும் அவர்க்குள் நீ பிழைத்திருப்பாய்-2
பிழைத்திரு என்றார் பிழைத்திரு என்றார்

## 47

**நான் ஓடறதும் தேடறதும் எல்லாமே**
எங்க இயேசப்பாவுக்காகத்தான் இருக்கனும்
நான் பாடறதும் பேசறதும் எல்லாமே
எங்க இயேசப்பாவ பத்தி இருக்கனும்

நான் இன்னும் ஜீவனோட
நன்மை செய்யும் தேவனோட
நம்பிக்கையா இருக்கிறது யாரால
எங்க இயேசுவால
குறுகுறுன்னு சிரிச்சிகிட்டு
குத்தம்குறைய தொலைச்சுபுட்டு
குதூகலமா வாழுறது யாரால
எங்க இயேசுவால

கடனும் உடனும் இல்லாம
கைகட்டி நில்லாம
கச்சிதமா வாழுறது யாரால
எங்க இயேசுவால
அரண்மனையா தேடாம
அங்கும் இங்கும் ஓடாம
அலைச்சலெல்லாம் அடங்கினது யாரால
எங்க இயேசுவால

வருத்தம் வேதனை துக்கம்
ஓடிப்போச்சி ஒரு பக்கம்
வாழ்க்கையிலே மறு பக்கம் யாரால
எங்க இயேசுவால
எதை நினைச்சும் கலங்காம
இதயத்தில குலுங்காம
நிம்மதியா சிரிக்கிறது யாரால
எங்க இயேசுவால

மரணத்துக்கு அஞ்சிடாம
மறுதலிப்பு செஞ்சிடாம
மரித்தாலும் பிழைத்திருப்பது யாரால
எங்க இயேசுவால
பரலோகம் திறந்திருக்கு
பாதையொன்னு கிடைச்சிருக்கு
பக்குவமா போய்ச்சேருவேன் யாரால
எங்க இயேசுவால

## 48

**நான் வணங்கும் தெய்வம்**
அவர் இயேசு என்னும் நாமமுள்ள ஒருவரே
அவர் என்னை நினைத்த தெய்வம்
என்னை கண்ணுக்கு கண்ணாய் காத்திடும் என் நேசரே

வானத்தையும் பூமியையும் உண்டாக்கி வைத்தவராம்
இருளையும் வெளிச்சத்தையும் இரண்டாகப் பிரித்தவராம்-2
எந்த துதிகளுக்கும் ஸ்தோத்திரத்திற்கும் பாத்திரர்..

ஆதாமின் மீறுதலால் நானும் காயம் பட்டேன்
என்னுடைய மீறுதலால் எந்தன் இயேசு காயம் பட்டார்;-2
(என்ன சொல்லிப்பாடுவேன்-நான் என்ன
சொல்லிப்பாடுவேன்)
எந்தனுக்கு சமாதானம் உண்டு பண்ணவே
எந்தனது ஆக்கினை அவர்மேலே வந்ததே-2
என் இயேசு ராஜாவின் தழும்புகளால் மட்டுமே
என் நோயும் குணமாகி தேவ சுகம் கிட்டுமே-2

என்னுடைய பாடுகளை ஏற்றுக்கொண்டவராய்
என்னுடைய துக்கங்களைச் சுமந்து கொண்ட தேவனவர்-2
(என்ன சொல்லிப்பாடுவேன்-நான் என்ன
சொல்லிப்பாடுவேன்)

நிந்தைகளும் அவமானமும் அவரைச் சூழ்ந்ததே
எந்தனுக்காய் அத்தனையும் தாங்க நேர்ந்ததே-2
துளிர்க்கிற வேரைப்போல எழும்பின என் இயேசுவின்
விரும்பின ரூபம் மாறி அழகு முகம் சிதைந்ததே-2

சர்வத்திற்கும் மேலான சர்வவல்ல தேவனவர்
சர்வ லோக பாவத்தையும் சுமந்து தீர்த்த இயேசு அவர்-2
(என்ன சொல்லிப்பாடுவேன்-நான் என்ன
சொல்லிப்பாடுவேன்)
எண்ணாமற்போன என்னை எண்ணிப்பார்த்தவர்
காணாமற்போன என்னை கண்டு பிடித்தவர்-2
காணக்கூடாதவரை கண்கள் இன்று கண்டதே
சேரக்கூடாதவரை சேர மனம் துடிக்குதே-2

## 49

**நல்லவரே சர்வ வல்லவரே**
எக்காலத்திலும் துதிப்பேன்
அல்லேலுயா ஆராதனை
இருந்தவரும் இனி வருபவரும்
என்றும் மாறாத என் நேசரே
அல்லேலுயா ஆராதனை

அதிகாலை வேளையில் உமைத்தேடி வருவேன்
என்னோடு நீர் பேசுமே என்னோடு நீர் பேசுமே
உம் சித்தம் ஒவ்வொன்றும் நடந்தாக வேண்டும்
உமைப் போல எனை மாற்றுமே
எப்போதும் எனைத்தேற்றுமே

பரிசுத்த கிருபையால் பாத்திரத்தை நிரப்பும்
உமக்கென்று பயன் படட்டுமே
உமக்கென்று பயன் படட்டுமே
உம் கரத்தில் மாத்திரம் எனை அடக்கிக் கொள்ளும்
உயிர் உள்ள நாள் முழுதுமே

என் உயிர் உள்ள நாள் முழுதுமே

நிலையில்லா உலகினில் நிலையான தேவன்
நீர் போதும் என் இயேசுவே எனக்கு
நீர் போதும் என் இயேசுவே
உமை மட்டும் துதிக்கின்ற ஒரு நாவு போதும்
என் ஜீவன் உமக்காகவே-ஐயா
என் ஜீவன் உமக்காகவே

பரலோக ராஜ்ஜியத்தில் உம் பக்கம் நின்று
உமைத்துதிக்க வரம் வேண்டுமே
உம் கிருபை தர வேண்டுமே
தகுதியாய் என்னை உருவாக்கி எடுத்து
உம் மார்பில் சாய்த்திடுமே-நான்
உலகமெல்லாம் மறக்கனுமே

## 50

**நெடுந்தூரம் நான் சென்று பார்த்தாலும் அங்கே**
எங்கேயும் அல்லேலுயா
அது போல ஒரு காட்சி வரவேண்டும் இங்கே
ஒரு வார்த்தை சொல்லும் ஐயா
பரலோகம் இன்று இந்த பூலோகம் வந்து
உம் ஆட்சி வரவேண்டுமே உம் கிருபை தரவேண்டுமே
இளங்காலை நேரத்தில்  ஒவ்வொரு வீட்டிலும்
துதி சத்தம் எழும்பட்டுமே
பூலோகம் துதிக்கட்டுமே-முழு
பூலோகம் துதிக்கட்டுமே
பரலோகம் மகிழட்டுமே
ஒன்றான தேவன் நீர் உண்டாக்கி வைத்த
ஒவ்வொரு ஜீவனுக்கும்
உம் வசனம் உணவாகட்டும்

சிறு பிள்ளை படிக்கின்ற பாடங்களில்
உம் வேதம் முதலாகட்டும்
புதுச்சட்டம் போடுமய்யா
புதுச்சட்டம் போடுமய்யா
இன்றே நிறைவேற்றுமைய்யா
முழங்கால்கள் யாவும் உம்முன்னே மடங்கி
உம் நாமம் பணியட்டுமே
உமை அறிக்கை செய்யட்டுமே

உலகத்தின் மைந்தர்கள் யாவருக்கும்
உமைப்பற்றி பயம் இருக்கட்டும்
உள்ளிருக்கும் சுயம் விலகட்டும்
உள்ளிருக்கும் சுயம் விலகட்டும்
உன்னதத்தின் சுகம் தெரியட்டும்
விண்ணகத்தின் தேவன் தம் தன்னகத்துச் சித்தம்
மண்ணகத்தே நடக்கட்டுமே
மன்னவரைத் துதிக்கட்டுமே

அழுகையும் பற்கடிப்பும் வேண்டாமைய்யா
அது தாங்க முடியாதைய்யா
ஆனந்தம் வேண்டுமைய்யா
ஆனந்தம் வேண்டுமைய்யா
இரக்கத்தை காட்டுமைய்யா
ஒரு ஜீவன்கூட எரி நரகத்தில் செல்ல
விரும்பாத தேவரைய்யா
விரைவாக வருவீரைய்யா

## 51

**நீ விழுந்தது அது நல்லதுக்குத்தான்**
நீ எழும்பிடப்போகிறாய்
நீ அழுதது அது நல்லதுக்குத்தான்
நீ சிரித்திடப்போகிறாய்

சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடத்திடும்
இயேசு இருக்கையில கலக்கம் என்ன?
துயரங்கள் மத்தியில் ஆறுதல் அளித்திடும்
தூயவர் இருப்பதால் சோகம் என்ன

உன் உபத்திரவம் அது நல்லதுக்குத்தான்
தேவ பிரமாணம் கற்றுக்கொள்ள
உன் சோதனைகள் அது நல்லதுக்குத்தான்
தேவ உதவியைப் பெற்றுக்கொள்ள
உன் வருத்தங்கள் அது நல்லதுக்குத்தான்
இளைப்பாறுதல் நாடிட
உன் தோல்விகள் அது நல்லதுக்குத்தான்
இனி வெற்றிப்படி ஏறிட

நீ சிறுமைப்பட்டது நல்லதுக்குத்தான்
தேவ கண்கள் உன்னை நோக்கிட
உன் வறுமைகூட அது நல்லதுக்குத்தான்
உன் பெருமைகள் உடைந்திட
உன் பெலவீனம் அது நல்லதுக்குத்தான்
தேவ கிருபையை நீ ருசிக்க
உன் சுகவீனம் அது நல்லதுக்குத்தான்
தேவ கிரியைகள் வெளிப்பட

உனக்கும் எதிரி உண்டு அது நல்லதுக்குத்தான்
நீ ஜெயிப்பதை உணர்ந்திட
உன்னை நிந்திப்பதும் அது நல்லதுக்குத்தான்
நீ மன்னிப்பையும் வழங்கிட
உன் சூழ்நிலை அது நல்லதுக்குத்தான்
எந்த நாளிலும் நீ மகிழ
உன் குறைவுகள் அது நல்லதுக்குத்தான்
தேவ நிறைவுகள் நீ அடைய

தேவனின் திட்டத்தில் பாடுகள் இல்லாமல்
பரலோகம் என்பது இல்லை இல்லை!
இயேசுவின் பிள்ளைகள் இதை உணர்ந்திருந்தால்
எதுவும் உனக்கு இங்கு தொல்லை இல்லை!

## 52

**நீர் படைத்த சிருஷ்டிகள் ஒவ்வொன்றும் அழகு**
உம் வசனத்தின் வார்த்தைகள் எல்லாமே அழகு
நீர் இல்லாத ஒரு வாழ்க்கை யார்க்கென்ன அழகு
நீர் சொல்லாத ஒரு வார்த்தை இருந்தென்ன அழகு

அதிகாலையில் உம்மைத் தேடுகையில்
உம் ஆலோசனை அவை ஒவ்வொன்றும் அழகு
சில நேரத்தில் நான் தவறுகையில்
என் சிந்தனையில் தட்டி  திருத்துவது அழகு
நீர் எப்போதும் எனக்காக பரிந்துரைத்தல் அழகு
நான் இப்போதும் உமக்காக காத்திருத்தல் அழகு

மலைபோல எழும்பிடும் எதிர் வல்லமை
அதை பனிபோல கரைத்திடும் உம் கிருபை அழகு
சூறாவளி என்ன சுழல் காற்றும் தான் என்ன
சூழ்நிலையை மாற்றும் உம் பதிவிடைகள் அழகு
நீர் எனக்காக செய்கின்ற யுத்தங்கள் அழகு
நான் கணக்காக கேட்கும் உம் சத்தங்கள் அழகு

உபத்திரவத்தின் ஒரு குகை நடுவினில்-என்னை
தெரிந்தெடுத்து மீட்ட உம் இரட்சிப்பு அழகு
ஒரு சாட்சியாய் எனை உம்முன்னே நிறுத்தி நான்
உமைப்பற்றி சொல்கின்ற சுவிசேஷம் அழகு
உம்  கற்பனையும் கட்டளையும் கடைபிடிப்பதழகு
உம் கரம் பிடித்து காலமெல்லாம் வழி நடப்பதழகு

நீர் அழகைய்யா நின் பேர் அழகைய்யா
நேர் நிகரில்லா தயை காட்டும் அன்பழகைய்யா
எதைச்சொல்வதோ நான் எதை விடுப்பதோ
உம் நாமத்தை நினைத்தாலே நினைப்பழகைய்யா
நான் உமக்காக சுமக்கின்ற பாரங்கள் அழகு
நீர் எனக்காக ஒதுக்கும் உம் நேரங்கள் அழகு

நீர் படைத்த சிருஷ்டிகள் ஒவ்வொன்றும் அழகு
உம் வசனத்தின் வார்த்தைகள் எல்லாமே அழகு
நீர் அழைக்கின்ற மனிதரெல்லாம் பிழைக்கின்றதழகு
உமை நினைக்கின்ற யாவரையும் அணைக்கின்றதழகு

## 53

**நீரே எனக்கு எல்லாமுமான எங்களின் அன்பு பிதா**

ஐயா நீரே எனக்கு எல்லாமுமான
எங்களின் அன்பு பிதா

நீர் படைத்த சிருஷ்டிகள் ஒவ்வொன்றும் அழகு
நல்லதென்று நீர் கண்டீர்
உம் சாயலில் உருவான மனிதற்கு மட்டும்
அதிகமாய் இரங்குகிறீர்
வல்லமையின் உருவே வாக்குத்தத்த குருவே
வரமொன்றைத் தாருமைய்யா
ஆவியின் கனிகள் அத்தனையும் மொத்தமாய்
அமைந்திட வேண்டுமைய்யா

என் ஆவி ஆத்துமா சரீரம் எல்லாம்
உமக்கென்று ஒப்புக்கொடுத்தேன்
என் மனதும் உணர்வும் சித்தமுடன்
ஜீவ பலியாக தந்துவிட்டேன்
பரிசுத்தமாக்கும் பரலோக தேவா
உம் பாதத்தில் சரணம் ஐயா
என் பாவங்கள் துடைத்திட்ட பரமனே

உந்தன் பக்கத்தில் வரணும் ஐயா

ஒரு கணப்பொழுதும் மனம் சிதறாமல்
நான் கண்மூடி இருந்தாலும்
கண்ணெதிரே நின்று காட்சி கொடுப்பவர்
என் கர்த்தர் இயேசுவன்றோ
ஆவியின் கண்களை திறந்திட்ட
தேவனின் அற்புத தரிசனமே
நான் அடைந்திட்ட இன்பமும் அளவில்லா
மகிமையும் ஆனந்த குதூகலமே

ஒரு குறையில்லா வாழ்வினை நிறைவோடு
தந்திட்ட நேசரின் சந்நிதியில்
நான் நித்தமும் அம்ர்ந்து, நிம்மதி அடைந்து,
நித்திய சுகம் பெறுவேன்
இரு விழி ஓரத்தில் வழிகிற
நீரும் ஆனந்த கண்ணீரே
இந்த பாவியைக்கூட நேசிக்கும்
தேவனின் அன்பினைக் கண்டேனே

## 54

**நெஞ்சுருக என்னை அணைத்து**
நெடுந்தூரம் கையைப்பிடித்து
தாயைப்போல தூக்கி எடுத்து
தந்தையாய் எனக்கு புத்தி சொல்லும்
எங்க இயேசவைப் போல யாருமில்ல
அவர் உங்களுக்கும் ரொம்ப தூரமில்ல-2

காலைதோறும் என்னை எழுப்பி
கற்றுக் கொள்ளக்கவனிக்கச் செய்து
கண்ணு காதெல்லாம் திறந்து வச்சு
கல்விமானின் நாவைத் தந்த

என் ஆலோசனைக் கர்த்தர் இயேசு இருக்க
துர் ஆலோசனையெல்லாம் தூரமிருக்கும்-2

வெட்டவெளியில கண்டுபிடித்தென்னை
வெட்டியாக விட்டு விடாமல்
வெறுமையெல்லாம் நிரப்பி நல்லா
என் வேலை செய்யுன்னு அனுப்பினவர்
எஜமான்இயேசுவுக்காய் நான் ஓடுறேங்க
அவர் ராஜ்யமும் நீதியும் தேடுறேங்க-2

ஓநாய் கூட்டத்து மத்தியில
உள்ளே நுழைஞ்சேன் ஒத்தையில
வீணாய் நானும் போகக்கூடாதுன்னு
தானாய் வந்து தைரியம் கொடுக்கும்
இயேசு இருக்கையில பயமுமில்ல
நான் எப்பொழுதும் இயேசுவுக்கு பயந்தபுள்ள-2

பரத்துக்கென்னை சொந்தமாக்க
பணயம் வச்சாரு தன் உயிரை
ஜீவன் எனக்கு தந்ததுமல்லாமல்
தயவும் பாராட்டி தகுதிப்படுத்தும்
என் இயேசுவுக்காய் எங்கும் போவேனுங்க
இன்னும் நீசனும் அற்பனும் ஆவேனுங்க-2

பட்டும் படாம வாழ்ந்திருந்தேன்
பாக்குறதெல்லாம் ஆசப்பட்டேன்
கேக்குறதெல்லாம் கிடைக்குன்னு கேள்விப்பட்டும்
சாக்குபோக்கு சொல்லி தப்பிக்க நினைச்ச
என் இருதயத்த இயேசப்பா கேட்டாருங்க
அவர் பிடிச்சார்னா விட்டுவிட மாட்டாருங்க-2

# 55

1. **நிலையில்லா வாழ்வினில் நிம்மதி தருவது எது**?
எனக்காய் ஜீவனைத் தந்த என் தேவனை என்றுமே
துதிப்பது அது

2. மரண இருளினில் நடந்தாலும்
உன்னைத் தைரியப் படுத்துவது எது?
என்றுமே என்னோடு வருகின்ற
தேவனின் வசனத்தின் வார்த்தைதான் அது

3. எந்தச் சூழ்நிலையிலும் புது மகிழ்ச்சியாய் இருக்கவே
கற்றுக்கொடுத்தது எது?
குறைவுகளெல்லாம் நிறைவாக்கும் எங்கள்
கிறிஸ்துவின் பிரியம்தான் அது

4. பெலவீன நேரத்தில் சோர்ந்திடும் வேளையில்
உன்னைத் தாங்கிடும் பெலன்தான் எது?
கன்மலை வெடிப்பினில் வைத்தென்னைக் காக்கும் என்
தேவனின் கரம்தான் அது

5. மாமிச உலகினில் ஆவியின் வாழ்க்கையில்
உன்னில் ஜெயிப்பது எது?
பாவத்தை கண்டிக்கும் பரிசுத்த ஆவியின்
சத்திய வல்லமை அது

6. பாவத்தின் சாபத்தில் வீழ்ந்திட்ட உந்தன்
கறைகளைத் துடைத்தது எது?
எனக்காய் சிலுவையை சுமந்த என் இயேசுவின்
பரிசுத்த இரத்தம்தான் அது

7. அறிவும் புத்தியும் யோசனையும் உனக்கு
அள்ளித் தருவது எது?
ஆதியும் அந்தமும் ஆன பிதாவுக்கு

பயப்படும் பயம்தான் அது

8. உண்மையாய் உன்னை ஆவியின் பாதையில்
வளரச்செய்வது எது?
ஆண்டவர் சமூகத்தில் அனுதினம் அமர்ந்து
ஜெபித்திடும் ஜெபம்தான் அது

9. நீ கெட்டுப்போகாமல் பாது காக்க
உன்னைத் தொட்டு தூக்கியது எது?
எனக்காய் சொந்த குமாரனைக் கொடுத்த என் தேவனின்
அன்புதான் அது

10. மொத்தமாய் உந்தன் அத்தனை நடத்தையும்
நன்மையாய் நடப்பிப்பதெது?
பரிசுத்தத்தோடு பயபக்தியோடு நம்பிடும்
விசுவாசம் அது

11. சகலமும் படைத்த தேவனும் உன்மேல்
இரங்கிடச் செய்தது எது?
இரக்கமும் உருக்கமும் நிறைந்த என் தேவனின்
இணையில்லா கிருபைதான் அது

12. மரணம் பிரித்திடும் வேளையில் மறுபடி
தேவனில் இணைப்பது எது?
மரணத்தை ஜெயித்த இயேசு கொடுத்த
நித்திய ஜீவன்தான் அது

## 56

**ஒண்ணும் ஒண்ணும் மூணுன்னு சொன்னேன்**
ஒண்ணு விடாம எதிர்த்து நின்னேன்
கண்ணு மண்ணு தெரியாம வாழ்ந்தேன்
கண்டு பிடிச்சீங்களே-சும்மா

கண்ணாமூச்சு ஆட்டம் போட்டேன்
கட்டி பிடிச்சீங்களே

விரும்பினபடி குறும்பு செஞ்சேன்
திரும்பத் திரும்ப மறுதலிச்சேன்-2
அசுத்தத்துல புரண்டு புரண்டு
அச்சத்தில மருண்டு மருண்டு-2
திசைக்கொரு பக்கம் ஓடித்திரிஞ்சேன்
விட்டு பிடிச்சீங்களே-என்
திமிரெடுத்த நினைப்பையெல்லாம்
புட்டு ஒடைச்சீங்களே

கண்டபடி கண்ண அலையவிட்டேன்
கண்டதையெல்லாம் நம்பித் தொலைச்சேன்-2
உண்ட வீட்டுக்கு ரெண்டகம் பண்ணி
தெண்டமா ஒரு ஜீவனம் பண்ணி-2
இஷ்டத்துக்கும் வாழ்ந்த என்மேல்;
இஷ்டப் பட்டீங்க-என்
நஷ்டத்தையெல்லாம் ஈடு கட்ட
கஷ்டப் பட்டீங்க

குத்தம் குறைக்கே முக்கியம்; கொடுத்தேன்
மொத்தத்துல என் புத்தியைக் கெடுத்தேன்-2
அத்துமீறிக்கூட ஆசை புடிச்சு
உத்தமனாட்டும் நடிச்சு நடிச்சு-2
உதவாக்கறையான எனக்கு
உதவி செஞ்சீங்க
இந்த ரெண்டுங்கெட்டானையும் கூட
தெளிய வச்சீங்க

# 57

## ஒரு நாள் இயேசு திரும்பவும் வருவார் சீக்கிரம் திருந்திடப்பா

பல நாள் திருடனும் பதுங்க முடியாது பாத்து நடந்துக்கப்பா
காலம் கடந்து போய்க்கொண்டேதான் இருக்கும்

கடைசி நேரத்துல கைகொட்டிதான் சிரிக்கும்
ஆனாலும் என் தேவன் வருகிற நேரத்துல
ஓடி ஒளிஞ்சாலும் உலகத்தின் ஓரத்துல
முடிஞ்சது முடிஞ்சது டோய்..

உன்னால நான் கெட்டேன் என்னால நீ கெட்டன்னு
முன்னால போனாலும் இடிக்கிற நீ
பின்னால வந்தாலும் கடிக்கிற நீ
பொன்னால பெண்ணால மண்ணாலதான் கெட்ட
என்னத்த சொன்னாலும் கண்ணைத்தான் மூடிட்ட
களியாட்ட விளையாட்டா செஞ்சதெல்லாம் தப்புதான்
இதுலேட்டா புரிஞ்சாலும் இனியும் ஒரு வாய்ப்புதான்
திருந்திடு திருந்திடு இனியாச்சும் திருந்திடு
வருந்திடு வருந்திடு இப்பவாச்சும் வருந்திடு டோய்..

நல்லத செஞ்சாலும் கெட்டத செஞ்சாலும்
இயேசப்பா முன்னால நிக்கனும் நீ
உன் தப்ப அந்நாளில் கக்கனும் நீ
ஏன் இந்த வம்பு இயேசுவ நீ நம்பு
இரட்சிப்புக் கேற்றபடி இப்பவே நீ திரும்பு
கர்த்தருக்குப் பயந்துட்டா காலமெல்லாம் ஜாலிதான்
கண்மூடி படுத்துகிட்டா கண்டதெல்லாம் இருட்டுதான்
மறந்திடு மறந்திடு பழசெல்லாம் மறந்திடு
திறந்திடு திறந்திடு மனசெல்லாம் திறந்திடு டோய்..

ஒருநோக்கம் இல்லாம உருவாக்கல உன்ன
ஒன்னோட இஷ்டத்தில நீ பொறக்கல
ஒரு நாளும் நீ உனக்கு சொந்தமில்ல
மண்ணோடுக்கொத்த நீ மண்ணோட போறதுக்கா
மன்னாதி மன்னரு மனுஷரா வந்தாரு
இயேசப்பா முன்னால எல்லாமே மண்ணுதான்
இப்பகூட ஏத்துகிட்டா நீயும் அவர் கண்ணுதான்
எழுந்திடு எழுந்திடு கண் விழிச்சு எழுந்திடு

உணர்ந்திடு உணர்ந்திடு உண்மையத்தான் உணர்ந்திடு
டோய்..

## 58

**ஒரு விடுதலை விடுதலை விடுதலை**
**உண்டாக வேண்டும்**
தேவ கரம் என்னை கரம் என்னை கரம் என்னை
தொட்டாக வேண்டும்

இயேசுவின் நாமத்தில் பிரார்த்தனை செய்கிறோம்
இயேசுவின் நாமத்தில் கட்டளை கொடுக்கிறோம்
இயேசுவின் நாமத்தில் ஜெயமதை பெறுகிறோம்

சுயம் அதற்கு மரித்து புது ஜெயம் பெற
உயிர்ப்பிக்க வேண்டும்
இறுக்கிய கட்டுகளெல்லாம் இன்று அறுந்திட
வரம் தர வேண்டும்
இயேசுவின் நாமத்தில் (8)
நாங்கள் இயேசுவின் சுதந்திரவாளிகள்
எங்கள் தேவனின் சுவிகாரப் புதல்வர்கள் (2)
எங்கள் இயேசுவின் இரத்தம் ஜெயம் தரும்
எந்தப் பாவத்தையும் அது நீக்கிடும் (2)
எனைத்தொட எந்த எதிர் கிரியைகளுக்கும்
இனி அனுமதி இல்லை இல்லை இல்லை இல்லையே
புது அபிஷேகம் என்னை வந்து நிரப்பிடவே
எந்த வியாதியும் இனி என்னில் இல்லை இல்லையே

அனல் அனல் தேவ அனல் அனல் அது
உனக்குள்ளே இப்பொழுதே இரங்கட்டுமே
பெலன் பெலன் புது பெலன் பெலன் இன்று
உனக்குள்ளே அதிகமாய் நிரம்பட்டுமே
உந்தன் பாவங்கள் சாபங்கள், விலகியதே

தேவகிருபையின் ஆவியும் நிரப்பிடுதே
எந்த செய்வினை மந்திரம் ஓடியதே
தேவ மகிமையும் உன்னை ஆட்கொள்ளுதே
இயேசுவின் நாமத்தில் (8)

உற்சாகத்தின் ஆவியும், உணர்வுள்ள ஆவியும்
பெலனுள்ள ஆவியும், தைரிய ஆவியும்
ஒரு மன ஆவியும், சமாதான ஆவியும்
விசுவாச ஆவியும், நீதியின் ஆவியும்
தேற்றிடும் ஆவியும், ஊற்றிடும் ஊற்றிடும் ஊற்றிடுமே..
கர்த்தருக்குப் பயப்பட, தேவ அன்பில் நிலைப்பட
பொறுமையைக் காத்திட, கனிகளைக் கொடுத்திட
கரமதை நீட்டி வரமதைத் தாருமே
இயேசுவின் நாமத்தில் (8)

## 59

**பணத்துக்கு குறச்சலில்ல படைபலத்துக்கும் கவல இல்ல**
கூப்பிட்டா ஓடிவர கூட்டத்துக்கொன்னும் குறைவு இல்ல
ஆனாலும் ஏதோ ஒண்ணு எனக்கு கொறயுது
அது என்னனு தேடிக்கிட்டு உள்ளம் ஏங்குது

ஓடோடி உழச்சிப்பார்த்து ஓவரா பணத்த சேர்த்து
கோடானு கோடிய கொட்டி குறைகளை தீர்த்துப் பார்த்தும்
நாடோடி போலத்தானே மனசு தவிக்குது
எல்லாமே இருந்தும் ஏதோ இல்லாதிருக்குது

பேர்புகழ் பெற்றிருக்கேன் பெரிய மெடலும் வாங்கிருக்கேன்
ஊர்முழுசும் நல்லா உலா வந்து உசந்திருக்கேன்
தாராள மனசுக்காரன்னு ஊரு புகழுது-ஆனா
ஏராளமா எனக்கு ஏக்கம் இருக்குது

கண் முழிச்சாலும் குருட்டு லைட்ட போட்டும் இருட்டு

பட்டப்பகலும் எனக்கு பார்க்கப் பயமா இருக்கு
நைட்டு லைப்ப போல வாழ்க்கை இருக்குது-நான்
கொயிட்டா உக்காந்தாலும் வேர்த்து விறுக்குது

சேராத இடமுமில்ல சிந்திக்காத நினப்புமில்ல
மாறாத மார்க்கமில்ல மறுபடி தெளிவும் இல்ல
தேடாத கடவுள் இல்ல ஓடா ஒடிஞ்சிட்டேன்
ஏடாகூடமா நான் எங்கேயோ சிக்கிட்டேன்

எனக்குன்னு யாரு இருக்கா இதுக்கொரு முடிவு இருக்கா
எதையோ இழந்த எனக்கு எங்கன்னா நிம்மதி இருக்கா
இதயம் படபடன்னு ஏதோ சொல்லுது-எனக்கு
இரட்சிப்பு தேவையின்னு எடுத்து சொல்லுது

இதுதான் அந்த குறையா
இதுவரைக்கும் நானே என்ன கெடுத்திட்டேன்-இப்ப
இயேசுகிட்ட வந்து என்ன கொடுத்துவிட்டேன்

இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது இன்று
இயேசப்பா வந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது இன்று
ஓசன்னா ஓசன்னா அல்லேலுயா-2
சந்தோஷமா பாடு அல்லேலுயா-2

## 60

**பொன்னோ மணியோ தேவையில்லை**
இயேசு இருப்பதினால் கவலையில்லை
இது வெறும் வார்த்தையில்லை
வெட்டிப்பேச்சு இல்லை
ருசித்துப்பார்த்தவர்க்குப் புரியும் இது
இயேசுவை ரசித்துப் பார்த்தவர்க்குத் தெரியும் இது-2

ஆரம்பம் அற்பமானாலும்
முடிவு (சம்பூர்ணமாகும்)-2
காலங்கள்  கடந்து போனாலும்
காத்திருந்தால் (புது பெலனுமாகும்)-2
நாளை தினம் குறித்து கவலையில்லை
நடுத்தெருவில் நிற்கத் தேவையில்லை-2
இது ஆசை வார்த்தையில்லை
ஆள் சேர்க்கவில்லை
அனுபவித்தவரின் சாட்சி இது
இயேசுவை அறிந்து கொண்டவரின் பேச்சு இது-2

பலவீனம் அது வந்த போதும்
தேவ கிருபை பெலன் அது (நமக்கு போதும்;)-2
எதிராளி நம்மைச் சூழ்ந்த போதும்
அவர் நமக்காக செய்யும் (யுத்தம் போதும்)-2
எந்த சூழ்நிலைக்கும் கலக்கமில்லை
இதெல்லாம் நினைக்க துளி நேரமில்லை-2
இனி முறு முறுப்பு இல்லை
புலம்பல் அறிக்கையில்லை
எதுவும் அவர் சுமக்கும் பாரம் இது
எதற்கும் துதி செலுத்தும் நேரம் இது

விருதாவாய் தன்னைத் தேடவேண்டுமென்று
யாருக்கும் (அவர் சொன்னதில்லை)-2
பெரிதான இரட்சிப்புத் தரவேண்டுமென்று
எளிதாக நீதி (பேசும் தெய்வம்)-2
அவரே கர்த்தர் வேறொருவர் இல்லை
அவரைத்தவிர யாரும் தேவன் இல்லை
அவர் வேறு யாரும் இல்லை
வெகு தூரம் இல்லை
உனக்குள் வாசம் செய்யும் ஆவியானவர்
உன்மேல் நேசம் வைத்த இயேசுவானவர்

## 61

**ராஜா ராஜா எங்கள் இயேசு ராஜா**
உம்மை அன்போடு அழைக்கிறோம் வாரும் ராஜா
ரோஜா ரோஜா சாரோனின் ரோஜா
எங்கள் ராஜாதி ராஜாவே வாரும் ராஜா

வானாதி வானங்களும்
உம்மை கொள்ளக்கூடாதிருக்கும்
கர்த்தாதி கர்த்தத்துவம்
உங்க தோளின் மேலேயிருக்கும்
ஆதியும் அந்தமும் ஆனவரே
ஆரம்பம் முடிவு இல்லாதவரே
முந்தினவர் பிந்தினவர் நீரே
இருந்தவர் இருப்பவர் வருபவரே

மாட்சிமையும் வல்லமையும்
மகிமை ஜெயமும் மகத்துவமும்
ராஜ்யமும் உம்முடையவை
தேவன் எல்லாமே ஆளுகிறீர்
எல்லோர்க்கும் தலைவராய் உயர்ந்தவரே
எல்லாவற்றிற்கும் மேலானவரே
எல்லார் மேலும் தயை உள்ளவரே
எல்லா மகிமைக்கும் பாத்திரரே

மார்பருகே பொற்கச்சையும்
ஏழு பொன் விளக்கின் மத்தியிலும்
நிலையங்கி தரித்தவராய்
ஏழு நட்சத்திரம் ஏந்தினவராய்
தேவ மகிமையின் பிரகாசமே
தெய்வீகத்தன்மையின் சொரூபமே
ஒருவராய் சாவாமையுள்ளவரே
ஒருபோதும் மாறாத மெய்தேவனே

தூயாதி  தூயவரே தூய ஆவியும் ஆனவரே
துதி கனம் மகிமைக்கெல்லாம்
என்றும் பாத்திரர் ஆனவரே
காணக்கூடாதவராய் இருப்பவரே
சேரக்கூடா ஒளியில் வசிப்பவரே
சத்துவமும் வல்லமையும் உம் கரத்தில்தான்
நித்தியத்துக்கான வழி உம்மிடத்தில்தான்

## 62

**சாரோனின் ரோஜாவே என் லீலி புஷ்பமே**
மருதோன்றிப் பூங்கொத்தே என் மணவாளரே-2
உம் கரம் பிடிக்க காத்திருக்கும் கன்னிகை நானே
என் மனமகிழ்ச்சியாயிருக்கும் நேசர் நீர்தானே-2

கண்ணே மணியே என்று கைகளில் அள்ளிக்கொண்டு
ரூபவதியே என்று சேர்த்தணைத்தாரே
என் எல்லா குறைகளையும் தீர்த்து வைத்தாரே-2
நான் மணவாளன் இயேசுவுக்கு சொந்தமல்லவோ
அவர் எனையாளும் ராஜாதி ராஜனல்லவோ-2

அன்பின் சிறைகளுக்குள் கட்டி இழுத்துக்கொண்டு
உள்ளம் கவர்ந்து எந்தன் கரம் பிடித்தாரே
என்னை உள்ளங்கையில் வரைந்து குரல் கொடுத்தாரே-2
என் பெயர் சொல்லி அழைத்திருக்கும் நேசரல்லவோ
நான் அவர்க்குள்ளே பிழைத்திருக்கும் தாசனல்லவோ-2

கற்புள்ள கன்னிகையாய் ஒப்புக்கொடுக்கப் பட்டேன்
காலம் வரும் வரைக்கும் காத்திருப்பேனே
இயேசு காட்சி கொடுக்கும் வரை பார்த்திருப்பேனே-2
என் இதய சிங்காசனத்தில் இயேசு ராஜாவே
பொன் உதய விடியலைப் போல் வீற்றிருப்பாரே-2

ஆத்தும நேசர் அவர் ஆலய தேவன் அவர்
இயேசு என்னும் இனிய நாமம் உள்ளவர்
என் எல்லா எல்லைகளிலும் நிறைந்திருப்பவர்-2
என்னைப் பரலோகம் கொண்டு செல்லும் வழியானவர்
இந்தப் பரதேசிக்காக அன்று பழியானவர்-2

## 63

**ஸ்தோத்திர கீதங்களை எப்போதும் பாடிடுவேன்**
ஓயாமல் உம்மைப்பற்றி உற்சாகமாய் துதிப்பேன்

அல்லேலுயா அல்லேலுயா அல்லேலுயா
அல்லேலுயா அல்லேலுயா அல்லேலுயா

தாயே தனிச்சிறப்பே தயங்காமல் தருபவரே,
தந்தையுமாகி என்னை தாலாட்டும் தயாபரரே
கவியே கன்மலையே கண்மணிபோல் காப்பவரே
கலங்கிடும் இருதயத்தின் ஆறுதலே ஸ்தோத்திரமே

நாடி நரம்பெல்லாம் உமைப்பாட ஏங்கி நிற்க
தேடி வந்தவரே தெள்ளமுதே ஸ்தோத்திரமே
மாறும் உலகினிலே மாறாத நேசரவர்
மன்னவர் இயேசுவுக்கு மறுபடியும் ஸ்தோத்திரமே

மலரே மாமழையே மனதோடு இருப்பவரே
மறைபொருள் அறிந்தவரே மறுரூபமானவரே
உயிரே உயிர்த்தவரே உறங்காமல் காப்பவரே
உள்ளம் முழுவதிலும் உறைபவரே ஸ்தோத்திரமே

வாழும் வையகமே வளமான நீர் நதியே
வாழ்க்கையை தந்துவிட்ட வள்ளலுக்கு ஸ்தோத்திரமே
ஏழை குரல் கேட்டு எளியோர்க்கு மனம் இரங்கும்

இயேசு அப்பாவிற்கு எப்பொழுதும் ஸ்தோத்திரமே.

ஒளியே, ஒரு நினைவே ஒன்றான மெய்ப்பொருளே
குணமே குளிர்நிழலே குறையாமல் கொடுப்பவரே
மூச்சே முழுப்பயனே முடிவில்லா ஒரு தயவே
பேச்சே பெரும்சுகமே பெரியவரே ஸ்தோத்திரமே.

ஆளும் ஐம்புலனே அன்போடு அணைப்பவரே
அளவே இல்லாத அதிசயமே ஸ்தோத்திரமே.
ஒருவரும் சேராத ஒளியினிலே வாசம் செய்யும்
உன்னத தேவனுக்கே ஓயாமல் ஸ்தோத்திரமே

## 64

**தாகம் உள்ளவன் மேல் தண்ணீரை ஊற்றும் தேவனே**
வாஞ்சையோடு வந்திருக்கும்
இருதயத்தைப் பாரும் தேவனே
மாம்சமான யாவர்மேலும் ஆவியை ஊற்றும் தேவனே
ஏக்கமாக நின்றிருக்கும் எங்களை நிரப்பும் தேவனே

நல்லவர் வல்லவர் போதுமானவர்
இன்னும் என்னை நிரப்புகின்ற ஆவியானவர்

பரிசுத்தம் வேண்டும் பயபக்தியும் வேண்டும்
உண்மையும் உத்தமுமாய்
உம்மை என்றும் தொழ வேண்டும்
காலில் விழ வேண்டும் கதறி அழ வேண்டும்
கர்த்தர் கைபிடித்து காலூன்றி எழ வேண்டும்
ஆதி அந்தமும் ஆன என் தெய்வமே
ஆயுள் முழுவதும் காத்திடும் என் ராஜனே-2
ஊற்றிடுமே உந்தன் வல்லமையை எனக்கு
உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரைக்கும்-2

அபிஷேகம் வேண்டும் அக்கினி அனல் வேண்டும்
அங்க அவயமெல்லாம் எங்கும் வந்து தொட வேண்டும்
தேவ பெலன் வேண்டும் ஜீவ நதி வேண்டும்
நாவுகள் இப்பொழுதே நவமானதை பேச வேண்டும்
நாளும் உம் வழியில் நன்றாய் நடக்கவே
தேளும் சர்ப்பங்களை என் கால் மிதிக்கவே-2
சத்துருவின் சகல வல்லமையை மேற்கொள்ள
உத்தரவைத் தாருமே உன்னதத்தின் தேவனே-2

மறுரூபம் வேண்டும் மாற்றம் தர வேண்டும்
மகிமை ராஜனுக்குள் மற்றபடி எது வேண்டும்
ஆறுதல் அது வேண்டும் தேறுதல் வர வேண்டும்
பாதைகள் முழுவதிலும் சமூகம் கூட வர வேண்டும்
தேவைக்கெப்பொழுதும் உம்மிடத்தில் சேரவே
சிந்தை சிதறாமல் சீராக வாழவே-2
வல்லமையின் ஆவியே வரங்களால் நிரப்புமே
உன்னதத்தின் ஆவியே உதவிக்கரம் நீட்டுமே-2

## 65

**உதவி வரும் கண்மலையே**

உயிரோடு எழுந்தவரே உண்மையிலே
உம்மைபோல தேவன் யாருண்டு
கண்மனிபோல் காப்பவரே
கைவிடாமல் மேய்ப்பவரே
கர்த்தாவின் அன்பிற்கிணை ஈடு ஏதுண்டு-2
நீர் இல்லாத வாழ்க்கை ஒன்று உண்டா
நீர் சொல்லாத வார்த்தை ஒன்று உண்டா-2
எந்தனுக்காய் உம்மை தந்த தேவா
இருளிலிருந்து என்னை பிரித்த தேவா-2

தன்னந்தனிமையில் வாடும் போதினில்
அருகில் வந்து என்னை அணைத்த அன்பு தெய்வமே

உள்ளம் முழுவதும் உந்தன் அன்பினை
ஊற்றி ஆற்றித் தேற்றி அரவணைத்த தெய்வமே
மறுபடியும் பிறந்தேன் உமக்குள்ளே தானே
மனமதையும் திறந்தேன் உமக்கென்று நானே-2
என் எண்ணமெல்லாம் ஏக்கமெல்லாம் இயேசு நீரய்யா
என் உள்ளமெல்லாம் உணர்வு எல்லாம் உமக்கு தானய்யா

காலைப் பொழுதினில் கர்த்தர் கரத்தினில்
என்னை இணைக்கும் போது
எண்ணமெல்லாம் இனிக்குதே
மாலை நேரத்தில் மறுபடி நேசரில்
மனதை கொடுக்கும் போது மற்றதெல்லாம் மறக்குதே
இயேசு இயேசு என்று என் இருதயம் துடிக்குதே
பேசு பேசு என்று உள் உணர்வும் அடிக்குதே-2
ஒரு வார்த்தையிலே உம்மைப்பற்றி புகழ முடியுமா
அந்த வானம் பூமி வந்தாலும் அளவு கொள்ளுமா

ஆதி அந்தமும் ஆன தெய்வமே
அடிமை என்னை கூட கிருபை கொண்டு பார்த்ததேன்
பூமி முழுவதும் உமதாய் இருக்கையில்
தேடி வந்து என்னை உம்மிடத்தில் சேர்த்ததேன்
தாயும் தகப்பனுமாய் தயவு செய்த இயேசுவே
தோளில் சுமந்து என்னை தூக்கி வளர்த்த நேசமே-2
வழி காட்டும் உந்தன் வலக்கரத்தில் அடங்கிருக்கனுமே
முழங்கால் யாவும் உமக்கு முன்னால் முடங்கிருக்கனுமே

## 66

**உமக்குள்ள நான்தானே நிலைச்சிருக்கனும்,**
உம்மோடு உம்மோடு தினம் பழகனும்
பரிசுத்த ஒரு வாழ்க்கை நான் வாழனும்,
பயத்தோடும், நடுக்கத்தோடும் உம்மைச்சேரனும்
செங்கடலைப் பிளந்தவரே, அன்று யோர்தானில் நுழைந்தவரே
(எரிகோவைச் சுற்றிசுற்றி வருகையிலே-ஜனங்கள்)-2

ஏழாம் நாளில் அதை இடித்தவரே..
ஏழாம் முறை அதை இடித்தவரே

ஆறு நாட்களில் உலகத்தை படைத்து
ஆதாம் தம்பதிக்கு தோல் உடையை கொடுத்து
ஆபேல் காணிக்கையை அங்கீகரித்து
ஏனோக்கோடு நீர் எப்பொழுதும் சஞ்சரித்து
நோவா குடும்பத்தை பேழைக்குள் சேர்த்து
வானவில் கொண்டு உடன்படிக்கை காத்து
பாபேல் கோபுரத்தை பட்டென்று தகர்த்து
பற்பல பாஷைகளை பல்வேறாய் பிரித்து
தலைமுறை தலைமுறையாய், ராஜரீகம் செய்பவரே-2
உம் போல ஒரு தெய்வம் இல்லை ஐயா-2
நீர்தானே என் வாழ்வின் எல்லை ஐயா-2

ஆபிரகாமை நீர் அன்போடு அழைத்து
அவருக்கொரு பிள்ளை ஈசாக்கை கொடுத்து
யாக்கோபின் வழியில் இஸ்ரவேலைத் தெரிந்து
யோசேப்பின் மூலம் எகிப்துக்குள் நுழைந்து
மந்த நாவிருந்தும் மோசேவை அழைத்து
அவருக்குத் துணையாய் ஆரோனைக் கொடுத்து
பார்வோன் இருதயத்தை பத்து முறை தடுத்து
அடிமை வீட்டிலிருந்து உம் ஜனத்தை பிரித்து
சீனாய் மலை மீதிலே பத்து கட்டளைகள் கொடுத்தவரே-2
உம் கற்பனைக்கும் கட்டளைக்கும் கீழ்ப்படிந்தால்-2
இரக்கமும் கிருபையும் அளிப்பவரே- என்றும்-2

யூதா கோத்திரத்தின் சிங்கமாக பிறந்து
உலக பாவங்களை ஒருவராக சுமந்து
மனிதனை மீட்டெடுக்க பாடுகளைச் சகித்து
பிதாவின் சித்தத்திற்கு உம்மை ஒப்புக் கொடுத்து
எனக்காய் நீர் அன்று சிலுவையில் மரித்து
மூன்றாம் நாளினிலே மகிமையாகஉயிர்த்து

உன்னதம் சென்றாலும் என்னைக்கூட நினைத்து
நித்திய ஜீவனுக்குள் என் பெயரை இணைத்து
கருவான நாள் முதலாய்
என்னை உருவாக்கி வளர்த்தவரே-2
நீர் காட்டும் அன்புக்கு ஈடில்லையே-2
நிச்சயமாய் இதற்கொரு விலையில்லையே-2

## 67

**உம்மப்போல ஒரு நல்ல தெய்வம்**
இந்த பூமியில நான் பார்த்ததில்ல
இரண்டு கண்ணப்போல என்ன வச்சிக்கிட்டு
நல்லா காப்பாத்துறது வேற யாருமில்ல

அப்பப்பா இயேசப்பா அடிமை நானப்பா
ஆறுதல் எனக்கு நீர்தானப்பா
அடைக்கலமாய் வந்தேனப்பா-2

அக்கினிச்சூளையில் கூட உலாவி
அத்தனை பேரையும் காப்பாத்துனீங்க
எத்தனையோ முறை இதபோலதாங்க
சிங்கக்குகையில, சிறையிருப்புல
சின்னப் பிள்ளையை பலி கொடுக்கும் நேரத்துல
செங்கடலுல சீறும் புயலுல
உங்க உதவியில உயிர் வாழவச்சீங்க

அன்னைக்கும் இன்னைக்கும் என்னைக்கும் மாறாம
அப்படியே உள்ள உம் வார்த்தைதாங்க
அடியேனுக்கு ஆகாரமுங்க-2

பறந்து காக்கும் பட்சியைப் போல
எருசலேமுக்கு ஆதரவு - நீங்க எங்களுக்கும் ஆதரவு
எங்க சபையிலும் எங்க ஸ்தலத்திலும்;
உங்க மகிமை விளங்கும் இந்த தேசத்திலும்

உங்க கிருபையால் தேவ தயவினால்
எங்க பட்டணத்தை தொட்டவரே நன்றி அப்பா

எல்லையைத் திட்டம்பண்ணி
தொல்லையை மட்டம்பண்ணும்
எங்க ஊரு இயேசப்பாவால
தங்கமாக மாறிடிச்சுங்க-2

உலகம் முழுமைக்கும் உம் ஆட்சி தாங்க
உம்மை மீறிட யாருக்குமே-ஒரு துணிவும் வந்ததில்லை
வானத்தையும் இந்த பூமியையும்
படைத்த கர்த்தருக்கே என்றும் ஆராதனை
காலத்தையும் எந்த நேரத்தையும்
அறிந்த தேவனுக்கே எங்கள் ஆராதனை

விண்ணுக்கும் மண்ணுக்கும் சொந்தக்காரர் உம்மை
எந்தக்காலமும் துதிக்கிறோம் நாங்க
இயேசு கிறிஸ்துதான் என் தெய்வமுங்க-2

## 68

**உம்மாலன்றி எனக்கு விடுதலை**
இல்லை இல்லை ஐயா
உம்துணையில்லாமல் வாழும் தைரியம்;
எனக்கு ஏது ஐயா

நான் மந்த நாவுமுள்ளவன்
எந்த சொந்த பந்தமற்றவன்-2
எந்த தகுதியும் இல்லாமல் இருக்கும்
என்னையும் ஏன் தெரிந்தீர்
என்னிலே என்ன கண்டீர்

என் காலங்கள் உமது கரத்தினில்
என் நேரங்கள் உமது கணக்கினில்

எங்கே போவது என்ன செய்வது
எதுவும் தெரியாமல் நின்றிருந்தேன்
என்னைக் கண்டதும் ஓடி வந்தவர்
கழுத்தைக்கட்டிக்கொண்டு முத்தமிட்டீர்

கெட்டுப் போயிருந்தேன் இரட்சிப்பு தந்தீர்
எப்படி நான் மறப்பேன் உம் சொற்படி நான் நடப்பேன்

என் கண்களில் பார்வை இல்லையே
சுற்றி நடப்பதும் தெரியவில்லையே
பிச்சை எடுப்பதும் பிறரை நம்புவதும்
எத்தனை நாளுக்கென்று ஏங்கிருந்தேன்
எந்தன் வெளிச்சமாய் எனக்கு இரட்சிப்புமாய்
என்னைத்தொட்டவர் நீர் என்றறிந்தேன்

இரட்சண்யத்தை என் கண்கள் கண்டபின்னும்
எதற்கு எதிர்பார்க்கிறேன் நீர் ஒருவரே என் நம்பிக்கை

உயிர் உள்ளது உணர்வு இல்லையே
உடல் முழுவதும் இருளின் தொல்லையே
கடும் வேதனையும் கல்லறைச் சோதனையும்
கட்டிப்போட்டு என்னை வைத்திருந்தும்
வஸ்திரம் தரியாமல் வாழ்க்கை புரியாமல்
வனாந்திரத்தில் வந்து தங்கிருந்தேன்

புத்தியைக் கொடுத்து உம் பாதத்தருகிலே
அமர்ந்திட இடம் கொடுத்தீர்
இந்த அடிமையை மீட்டெடுத்தீர்

என் ஜீவனின் பெலன் நீரே
என்றும் ஜீவித்திருக்கிறவரே
எங்கும் வியாபித்திருக்கிறவரே

## 69

**உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்வேன்**
உம்மாலே நான் ஒரு மதிலைத்தாண்டுவேன்
அநாதி தேவனே நீர் என் அடைக்கலம்
நித்திய புயங்கள் எனக்கு ஆதாரம்

உம்மைப் பற்றிக்கொள்வேனே
உம்மைச் சார்ந்து கொள்வேனே
உம்மைப் பின் தொடர்வேனே
உம்மால் ஜெயம் பெறுவேனே

போரடிப்பதற்கு புதிதும் கூர்மையும்
பற்களுமுள்ள யந்தரமாகிறேன்
மலைகளை நொறுக்க அரண்களை இடிக்க
உம் கரம் இருக்க உலகை ஜெயிக்கிறேன்

நான் இளைப்பதும் இல்லை ஓடி களைப்பதும் இல்லை
சோர்வடைவதும் இல்லை எதற்கும் பயப்படவில்லை

உன்னதமானவர் மறைவில் இருப்பேன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவேன்
வலுச்சர்ப்பங்களை தேள்களை மிதிப்பேன்
பால சிங்கத்தையும் மிதித்துப் போடுவேன்

பகல் வெய்யிலாகிலும் இரவின் நிலவாகிலும்
சேதப்படுத்தாமலே என்னைக் காக்கிறவர் நீர்

யுத்தத்தில் பட்டயத்தின் வெட்டுக்கு விலக்கி
சத்துருவின் தலையை நசுக்கிப் போட்டவர்
யுத்த சன்னத்தராய் யோர்தானைக் கடக்க
புத்தம் புது பெலனை இன்னமும் ஊற்றுவீர்

உந்தன் வலது கரம் என்னைப் பற்றிப் பிடிக்கும்
உந்தன் அக்கினி மதில் என்னைச் சுற்றி இருக்கும்

## 70

**உம்மவிட்டா எனக்கு இங்க யார் இருக்காங்க-இயேசப்பா-2**
இங்க உண்மையும் நன்மையும்
சொல்லிக் கொடுக்க யார் இருக்காங்க-இயேசப்பா

உலகம் தோன்றும் முன்னே என்னை
தெரிந்து கொண்டவர் நீர்
என் உள்ளிந்திரியம் சோதித்து அறிந்து கொண்டவர் நீர்-2
உம்மை நம்புகிற யாவரையும் புரிந்து கொண்டவர் நீரே-2
எல்லா துரைத்தன அதிகாரங்களை
உரிந்து கொண்டவர் நீரே-2
இந்த உண்மையும் நன்மையும்
சொல்லிக் கொடுக்க யார் இருக்காங்க-இயேசப்பா

பாவி என்று தள்ளிவிடாமல் பாதுகாக்கும் தேவன்
என்னைப் பலப்படுத்தி வலக்கரத்தால்
தாங்கிநடத்தும் ராஜன்;
பயப்படாதே என்று சொல்லி ஸ்திரப்படுத்தின தேவன்
கேடகமாய் பெரும் பெலனாய் என்னைச் சூழ்ந்த ராஜன்
இந்த உண்மையும் நன்மையும்
சொல்லிக் கொடுக்க யார் இருக்காங்க-இயேசப்பா

என்னை ஜெநிப்பித்த கண்மலை
என்னைப் பெற்ற தெய்வம் நீரே
கழுகைப் போல செட்டைகளின் மேல்
சுமந்து சென்றவர் நீரே
உயர் ஸ்தானங்களில் ஏறிவரப் பண்ணின தேவன் நீரே
உம்மை உயர்த்திடவும் துதித்திடவும்
விருப்பம் வைத்தவர் நீரே
இந்த உண்மையும் நன்மையும்
சொல்லிக் கொடுக்க யார் இருக்காங்க-இயேசப்பா

சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர்
வானத்திலும் பூமியிலும் நீர் ஒருவரே பரிசுத்தர்
யார் உமக்கு பயப்படாமல் போகக்கூடும் ஐயா
எல்லா ஜாதிகளும் உமக்கு முன்பாய்த்
தொழுதுகொள்வார் மெய்யாய்
இந்த உண்மையும் நன்மையும்
சொல்லிக் கொடுக்க யார் இருக்காங்க-இயேசப்பா

## 71

**உம்மோடு இருக்கும் நாள்வரையில்**
என் நினைவுகள் எப்பொழுதும் உம் அருகில்
என் எலும்புகள் உண்டான கருவரையில்
என் அவயங்கள் எல்லாமே உம் பொறுப்பில்

நான் பிரம்மிக்கத்தக்க விதமாய் ஆனபடியால்
நான் என்றென்றும் உம்மைமட்டும் துதித்திடுவேன்
என் உள்ளிந்திரியம் சோதித்தரிந்தவரே
என் உயிருள்ள நாளெல்லாம் பாடிடுவேன்

தேவா சரணம் ராஜா சரணம்-2

நான் நடந்தாலும் படுத்திருந்தாலும்
என்னை சூழ்ந்திருப்பீர் வழி அறிந்திருப்பீர்
அல்லேலூயா-2
நாவில் சொல் பிரவாமுன்னே அறிந்தவரே
உம்மை கேட்டுதான் வார்த்தையும் புறப்படுதே
அல்லேலூயா-2
உமக்கே மறைவாய் எங்கே போவேன்
தேவ சந்நிதியை மறந்து நான் எங்கே ஓடுவேன்
தேவா சரணம் ராஜா சரணம்-2

நான் வானத்திலும் பாதாளத்திலும்
படுக்கை போட்டாலும் நீர் அங்கிருக்கிறீர்
அல்லேலூயா-2
அதிகாலையின் செட்டைகளை எடுத்துக்கொண்டு
கடல் கடைசியில் போனாலும் அங்கிருக்கிறீர்
அல்லேலூயா-2
தேவா உம் கரமே அங்கும் என்னை நடத்துமே
இருள் மூடும் என்றாலும் உம் வெளிச்சம் வீசுமே
தேவா சரணம் ராஜா சரணம்-2

ஓ தேவனே உமது அறிவுரைகள்
எனக்கு எத்தனை அருமையானவைகள்
அல்லேலூயா-2
நான் விழித்திடும் போதும் உம் அருகில்
நான் காத்திருப்பேன் நீர் வரும்வரையில்
அல்லேலூயா-2
தேவா என்னை ஆராய்ந்து அறிகிறீர்
என் காலம் முழுதும் உம் வழியில் நடத்துவீர்
தேவா சரணம் ராஜா சரணம்-2

## 72

**உங்காசு எனக்கெதுக்கு-நீ வேலையப்பாரு சாத்தானே**
உன்உதவி எனக்கெதுக்கு-உம் பொழப்ப பாரு சாத்தானே
விழுந்து போன தூதனுக்கு எரி நரகம் காத்திருக்கு
எங்களுக்கும் உனக்கும் சம்பந்தமில்லை
இயேசப்பா ரத்தத்தில என்தேவ சித்தத்தில
உயிர் வாழும் எனக்கு சங்கடமில்லை

தட்டுத்தடுமாறிக்கூட நீ கிட்ட வந்து நிக்காத நிக்காத
விட்டகுறை தொட்டகுறைன்னு சொல்லிகிட்டு
அங்க இங்க எட்டி எட்டி பாக்காத-2

உன்னத்தான் பந்திக்கே அழைக்கலயே-பின்ன
இல பொத்தல் இல பொத்தலுனு சொல்லாத-2
அறுத்துப் போட்ட கோழியாட்டம் அலக்கழிச்சு-சும்மா
அங்க இங்க புரண்டு புரண்டு துள்ளாத-2

வச்சிரக்கல்லும் கோமேதகமும் நீ வேண்ணா போட்டுக்கோ
ஆண்டவர் வேதமும் அனுதின தியானமும்
அதுபோதும் புரிஞ்சுக்கோ-2
அடிமேல அடிஅடிச்சா அம்மிகூட நகரும்
ஆனாலும் என்மேல்கை வச்சிப்பாரு தெரியும்-2
அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி என்இயேசு இருக்க
அடிக்கடி நடிக்கறயே உனக்கென்ன கிறுக்கா?
உன் ராஜ்ஜியம் அது பூஜ்ஜியம்
உன் ராஜ்ஜியம் பூஜ்ஜியம்
போ போ போ போ..
எனக்குப் பின்னாகப்போ..சாத்தானே.

(இயேசு அப்பாவ மலைமேல நிக்க வச்சி
உலகத்த எல்லாம் பாக்க வச்சி
என்ன வணங்குன்னு சொன்னியே)
ஏமாந்தாரா எங்க இயேசப்பா
ஏன் உம்முன்னு நிக்கிற பேசப்பா..
உன்னப் பத்தி தெரிஞ்சிருந்தும் உன்கூட வருவனா?
என்னத்த நீ கொடுத்தாலும் ஏமாந்து போவனா?

## 73

**உங்க அன்புக்கு முன்னால நான் ஒன்னுமில்ல**
இந்த களிமண்ணு எப்பவுமே உங்க செல்லபுள்ள

எத்தனை முறை நானும் மறுதலிச்சேன்
அத்தனை முறையும் நீங்க மன்னிச்சிட்டீங்க
இத்தனைக்கும் நான் ஒன்னும் நல்லவனில்ல
எத்தன் என்னையும் நீங்க ஏத்துக்கிட்டீங்க

எம்மாத்திரம் நான் எம்மாத்திரம்
உங்க அன்புக்கேற்றதா இப்பாத்திரம்-2

சேறு சகதியில சிக்கிக்கிட்டிருந்த என்ன
சீறாகத்தூக்கி விட்டு
இயேசு ரத்தத்தில என்னக் கழுவி நல்லா
என்மேல அன்பு வைக்க

எம்மாத்திரம் நான் எம்மாத்திரம்
உங்க கிருபைக்கேற்றதா இப்பாத்திரம்-2

முதலும் தெரியாம முடிவும் புரியாம
மூச்சு விட்டுகிட்டு இருந்தேன்
முதலும் முடிவும் நீர் எனக்கு விடிவு நீர்
என்னையும் தேடி வந்தீர்

எம்மாத்திரம் நான் எம்மாத்திரம்
உங்க தயவுக்கேற்றதா இப்பாத்திரம்-2

ஆறு கடக்கையிலும் அக்கினி நடுவினிலும்
அன்பாக மூடிக்கொண்டீர்
யாருக்கும் இல்லாத பாக்கியம் தந்தென்னை
தோள்மேல தூக்கிக் கொண்டீர்

எம்மாத்திரம் நான் எம்மாத்திரம்
உங்க நினைப்புக்கேற்றதா இப்பாத்திரம்-2

எங்கு தேடியும் எனக்கு கிடைக்காத
சுத்தத் தங்கம் நீரே
எங்கு போனாலும் கூட இருக்கின்ற
யெகோவா ஷம்மா நீரே

எம்மாத்திரம் நான் எம்மாத்திரம்
உங்க உண்மைக்கேற்றதா இப்பாத்திரம்-2

## 74

**உங்க இரக்கமும் உங்க கிருபையும்**
என்னை தாங்கி நடத்துதே
உங்க தன்நிகரில்லா தயவுக்காக
ஏங்;கி கிடக்குதே என் இதயம் ஏங்கி கிடக்குதே

முந்நூறு தரம் என்ன மூவாயிரம் தரம் என்ன
முடிவில்லா உம் கிருபைக்கு முழு நீள அளவு என்ன
முத்திரை மோதிரமாய் என்னையும் வைத்துக்கொண்டீர்
முத்துமணி மாணிக்கமாய் உம் வசனம் எனக்கு தந்தீர்

அக்கிரமும் பாவமும் என்னைப் பிடித்திருந்த போதிலும்
அற்பமாய் எண்ணாமல் என்னை அரவணைத்த தெய்வமே
கட்டுகளும் உபத்திரவமும் கலங்கடித்த நேரத்தில்
விட்டுவிட மனதில்லாமல் விரும்பி வந்த இயேசுவே
இந்த உலகினில் எந்த உறவிலும் இந்த பரிவு இல்லையே
இதைப்புரிந்திட எனக்கிதுவரை எந்த அறிவும் இல்லையே
எனக்கெந்த அறிவும் இல்லையே
உம்மாலே உயிர்க்கப்பட்டேன் உமதன்பிலே ஈர்க்கப்பட்டேன்
உண்மையைப் புரிந்து கொள்ள
உள்ளம் முழுவதும் நொறுக்கப்பட்டேன்
இத்தனை முயற்சிகளை எனக்கென்று நீர் செய்ய
எத்தனை பாக்கியமோ கணக்கில்லை துதி செய்ய-2

ஒட்டுத்துணி இல்லாமலே உலகில் வந்த என்னையும்
இரட்சிப்பென்னும் வஸ்திரத்தால் மூடிக்கொண்ட தெய்வமே
அங்குமிங்கும் அலைந்து திரிந்து ஐயோவென்ற நேரத்தில்
ஆதரவுக் கரங்கள் நீட்டி அரவணைத்த இயேசுவே
என்னைக் கருவரை முதல் இதுவரையிலும் ஏந்தி வந்தவர்

உண்மை புரிந்திட உம்மை ருசித்திட ஒரு வாய்ப்பு தந்தவர்
உலகின் ஒளியுமானவர்
விந்தை கிறிஸ்தேசு எந்தன் சிந்தையிலே வந்து விட்டீர்
நிந்தைகளை நீக்கி உந்தன் மந்தையிலே சேர்த்துவிட்டீர்
என்னிலும் பலத்தவராய் என்னை மேற்கொண்டவரே
என்னையும் இணங்கப்பண்ணி என் மனதை ஜெயித்தவரே-2

நீர் பெரியவர் எனக்குரியவர் என் ஜீவனானவர்
இது என்றென்றைக்கும் நான் தங்கியிருக்கும்
இடமும் என்றவர் இதயத்தை திரும்ப வென்றவர்

## 75

**உருகுது உருகுது உள்ளமெல்லாம்**
உம் அன்பை நினைக்கையிலே
பெருகுது பெருகுது வெள்ளமென
உம் கிருபை எனக்குள்ளே-2
எனக்காய் சிலுவை சுமந்தீர் அன்று
அதனால்தானே பிழைத்தேன் இன்று-2

உவ்வொரு நாளும் உமக்குள்ளே நான்
நிலைத்திட வேண்டிடுவேன்
கண்மணிபோல் எனை காத்திடும் தேவனின்
கரமதை விட மாட்டேன்-2
ஒரு வழியாக உம்மிடம் சேர்ந்தேன்
திரும்பவும் போவேனோ
உம் சந்நிதி மறப்பேனோ

சிறுமையும் எளிமையும் ஆன என்மேல்
நினைப்பாய் இருப்பவரே
உணர்வாய் உயிராய் உள்ளம் முழுதும்
வலம் வரும் ஆண்டவரே-2
தேவரீர் எந்தன் துணையாய் இருந்து

விடுதலை தந்தீரே-என்னை
உமக்கென தெரிந்தீரே

மடங்கிய என்னைத் தாங்கிய தேவனில்
அடங்கிட வேண்டிடுவேன்
விழுகிற என்னைத் தூக்கிடும் தேவனைத்
தொழுதிட நாடிடுவேன்-2
அழுகிற போது அரவணைத்தீரே
ஆறுதல் தந்தீரே-ஐயா
அடைக்கலம் கொடுத்தீரே

உலகம் உண்டாகும் முன்னே என் பெயரை
முன் குறித்து வைத்ததென்ன
வானமும் பூமியும் படைத்தவராலே
ஒத்தாசை வந்ததென்ன-2
இதற்கென்று ஈடாய் உமக்கென்று நானும்
இதுவரை தந்ததென்ன இந்த
அன்பிற்கு விலையும் என்ன-

## 76

**வானம் பூமி யாவுமே ஒழிந்து போகும் ஓர் நாளில்**
வார்த்தையாக வந்த இயேசு வீற்றிருப்பார் அந்நாளில்

சர்வ வல்ல தேவன் அவர் சொல்ல சொல்ல நடக்கும்-அந்த
சர்வ சேனை யாவும் அவர் பாதம் பணிந்து கிடக்கும்

காற்றும் கடலும் யாவுமே கரைந்து போகும் ஓர் நாளில்
கர்த்தராகிய இயேசு மட்டும் காட்சி தருவார் அந்நாளில்

கேரூபீன்கள் சேராபீன்கள் சேர்ந்து அவரை வணங்க-அந்த
தேவ தூதர் கூட்டம் அவர் வார்த்தைக்கென்றும் இணங்க

ஒருமுனை தொடங்கி மறுமுனை வரைக்கும்
யுத்தம் உண்டாகும் ஓர் நாளில்
தேவசத்தம் கேட்கும் ஜனங்களுக்கே
ஜெயம் கொடுப்பார் அந்நாளில்

பரலோக சேனை ஒன்றாய் பரம தேவன் பக்கம் நிற்கும்
அதை பார்க்கும் கண்கள் யாவும் தன்னில்
பயந்து பயந்து நடுங்கும்

அந்தகாரத்தின் வல்லமை யாவும்
அழிந்து போகும் ஓர் நாளில்
அனலாய் எரிகிற அக்கினிக் கடலில்
அடைத்து வைப்பார் அந்நாளில்

அந்த நியாயத்தீர்ப்பு நாளும் வெகு தூரம் என்று இல்லை
விரைவாக வந்து சேரும் இது மாய வார்த்தை இல்லை

கடைசி கால சம்பவங்களில் கலங்கிப் போவார் ஒருபாதி
கடைசிவரைக்கும் நிற்பவர்கள் களிகூறுவார்-அது நீதி

மேகம் மீதில் இயேசு ராஜன் வேகமாக வருவார்
தேவ தாகமுள்ள யார்க்கும் புது ஜீவகிரீடம் தருவார்

முதலும் முடிவும் தெரிந்திடாமல்
மூச்சு விடுகிறாய் இந்நாளில்
முடிவே இல்லாத இயேசுவை அறிய
முயன்று பார் இன்னந்நாளில்

உன் வாசற்படியில் நின்று இயேசு பேசும் சத்தம் ஒன்று
உன் இதயக்கதவில் சென்று நற்செய்தியானதின்று

## 77

**புதிய வானமும் புதிய பூமியும்**
உண்டாக்கி வைப்பார் ஓர் நாளில்
புத்தம் புதிய எருசலேமும் பூத்து நிற்கும் அந்நாளில்

பரத்தை விட்டு இரங்கும் அந்த பரம எருசலேமும்
மணவாட்டியாக தன்னை நன்றாய் அலங்கரித்துக்கொள்ளும்

மரணம் துக்கம் வருத்தமெல்லாம்
மறைந்து போகும் ஓர் நாளில்
மன்னவர் இயேசு தேவஜனத்தின்
கண்ணீரைத் துடைப்பார் அந்நாளில்

தேவ வாசஸ்தலமும் தேவ ஜனங்களிடத்தில் இருக்க
தேவன் கூட இருந்து மனிதரில் வாசமாக இருக்க

இல்லை இல்லை என்ற சொல்லும்
இல்லாமல் போகும் ஓர் நாளில்
இருக்கிறவராய் இருக்கும் இயேசு
இருந்திடுவார் அந்நாளில்

ஆதி அந்தமான அல்பா ஒமேகாவுமான இயேசு
ஆயிற்றென்று சொல்லி அன்று ஜீவத்தண்ணீர் தருவார்

ஆண்டவர் படைத்த நகர வீதியில்
ஆலயம் இல்லை அப்போது
ஆட்டுக்குட்டியாம் வல்ல கர்த்தரே
அதற்கு ஆலயம் எப்போதும்

நகரின் வெளிச்சமாக இயேசுவின் மகிமை மூடியதினால்
இரவு அங்கு இல்லை அதனால் வாசல் அடைக்கவில்லை

பொய்யும் பயமும் அருவருப்பும்
புறம்பே இருக்கும் அந்நாளில்
ஜீவபுஸ்தகத்தில் இருப்பவர்கள்
உள்ளே நுழைவார் பரலோகில்

நெற்றி மீது தேவ நாமம் பெற்றிருக்கும் ஜனங்கள் அவரைப்
பணிந்து தொழுது வணங்கி தேவ சமூகம் சேருவார்கள்

மெய்யாய் சீக்கிரம் வருகிற இயேசு
வாசற்படியிலே உன்னோடு
அவரவர் கிரியையின் பலன் அனைத்தையும்
எடுத்து வருகிறார் தன்னோடு

இந்த தீர்க்க தரிசனங்கள்
கைக்கொள்ளும் காலம் வந்ததின்;று
இதை தீரக்கமாகக் கொண்டு
உன்னை அற்பணித்திடின்று.

## 78

**வானமும் பூமியும் படைத்தவரே**
வார்த்தையில் உண்மை உள்ளவரே
நீர் நல்லவர் என்று அறிக்கை செய்கிறேன்
நீர் வல்லவர் என்றும் உரக்கச் சொல்கிறேன்

பாவிகளில் நான் பிரதான பாவி
என்றுணர்ந்த போதும்
பாவத்தைக்குறித்து பரிசுத்தாவி
கண்டித்துணர்த்தும்போதும்
பாதைகள் முழுதும் வாதையின் கற்கள்
நிறைந்திருந்த போதும்
மனம் திரும்பாமல் மாற்றம் விரும்பாமல்
மங்கிப் போயிருந்தேன்

சேற்றுத் தண்ணீர்க்கும் ஊற்றுத் தண்ணீர்க்கும்
வித்தியாசம் தெரியவில்லை
காற்றையும் கடலையும் படைத்த தேவனை
கண்டு கொள்ளவில்லை
கதவைத் தட்டும் சத்தம் கேட்டும்
திறந்து பார்க்கவில்லை
வாசற்படியில் நிற்கும் இயேசுவை
ஏற்றுக்கொள்ளவில்லை

ஊரும் இல்லாமல் பேரும் இல்லாமல்
வாழ்ந்திருந்தவன் நான்
உலக பார்வைக்கு எல்லா நிலையிலும்
தாழ்ந்திருந்தவன் நான்
உன்னத தேவன் இயேசு கிறிஸ்துவை
மறுதலித்தவன் நான்
உதவி செய்திட ஓடி வந்தவரை
உதறித்தள்ளியவன் நான்

காக்கும் தெய்வத்தை காக்க வைத்த
அந்த நாட்கள் கொஞ்சமா
பார்க்கும் இடமெல்லாம் சேர்க்க
அவர்க்கென்ன ஆட்கள் பஞ்சமா
இணங்கப்பண்ணினார் இணங்கினேன்;
அவர் என்னிலும் பலத்தவர்
என்னை மேற்கொண்ட
இதயம் ஆட்கொண்ட
இயேசு ராஜன் அவர்

## 79

**என் ஆவலைத்தூண்டும் என் தெய்வ இயேசு**
உமைப்போல ஒரு தெய்வம் நான் கண்டதில்லை
என் கண்ணீரில் கைவைத்து துடைக்கின்ற நேசம்
இது தானே என் வாழ்வின் ஆனந்த எல்லை

ஆ…அல்லேலுயா.. ஆ…அல்லேலுயா..6

எந்நாளும் என்னை தன்னோடு நெஞ்சில்
அணைத்திடும் எந்தன் தேவனே
மண்ணான என்னை உம் கண்ணாக என்னும்
அன்புக்கீடாய் என்ன கொடுப்பேன்-ஐயா உம்
அன்புக்கீடாய் என்ன கொடுப்பேன்
உம்மை விட மாட்டேன் ஐயா
உம்மை விட மாட்டேன் ஐயா
உம்மை என்றும் விட மாட்டேன்
உம் கரங்களை பற்றிக்கொள்ளுவேன்-ஐயா உம்
புயங்களில் சாய்ந்து கொள்ளுவேன்

அவர் இடது கரம் என் தலையின் கீழும்
வலது கரம் எனை அணைத்துக் கொண்டும்-2
என் நேசரின் மார்பினிலே-ஐயா நான்
எப்பொழுதும் சாய்ந்திருப்பேன்-2

ஏன் எனக்கு..இதமாய் இருக்கு.-2

## 80

**இயேசுவே தேவன் என்று எல்லா நாவுகளும்**
அறிக்கை செய்யும்
கர்த்தரே தெய்வம் என்று ஜீவராசிகளும் உரத்த சொல்லும்
எல்லா நாமத்திற்கும் மேலானது இயேசு நாமமுங்க
எல்லா முழங்காலும் அவருக்கு முன்பாக முடங்கனுங்க
இயேசுவே பேசும் தெய்வம்
அவர் வார்த்தையே உலகின் வேதம்

கத்திச் சண்டை குத்துச்சண்டை போட்டு உன்னை இரட்சிக்க
அவர்க்கு அவசியமில்ல
எந்த வித்தைகளை காட்டி உன்னை தம் பக்கமா இழுக்க
அவர்க்குத் தேவையுமில்ல
எவன் மேல் இரக்கம் உண்டோ
அவன் எங்கே போனாலும் விடமாட்டார்
இயேசுவைப் போல உண்டோ
தன்னை நம்பினவரை கைவிடமாட்டார்
அவர் செய்கையில் நீதி உண்டு தேவ நீதியில் சேதி உண்டு

சொன்ன பேச்சை கேட்டு நீயும் உன்ன விட்டுக்கொடுத்தா
அவர் தன்னை விட்டுக்கொடுப்பார்
இன்னும் இன்னுமா அவர்க்கு கீழ்ப்படிஞ்சு நடந்தா
உனக்குத் தக்க பலனளிப்பார்
இடுக்கம் என்பதெல்லாம்
இறங்கிப்பார்த்தாதான் தெரியுமுங்க
உட்கார்ந்த இடத்திலேயே ஊரும் போய் சேர முடியாதுங்க
உயிரோடிருக்கும் இயேசுவை நீ
மரித்தோரிடத்தில் தேடாதே

அந்த அந்தப் பருவத்தில் எங்களுக்கு மழையைக்
கொடுக்கும் தேவனைப் போல் யாரு
சொந்த பந்தம் சொத்து சுகம் அத்தனையும் அவரே

இதை ஏத்துக்கொள்ளப் பாரு
நீ விடும் மூச்சு எல்லாம்
அது இயேசு விட்டுக்கொடுத்த ஜீவனுங்க
வாய் வரும் பேச்சையெல்லாம் முடிவில்
கணக்கு வாஙகிக்கொள்ளும் தேவனுங்க
கர்த்தரைத் தெய்வமாய்க் கொண்ட ஜனம்
அந்த பாக்கியம் தேவன் கொடுக்கும் கனம்

## 81

**இயேசுவின் இரத்தத்த எங்க தல மேல**
ஊத்திக்க ஊத்திக்க பெரிய விடுதலை
எத்தனை பிசாசுங்க எதிர்த்து நின்னாலும்
இயேசு எனக்குள் இருக்க பயமே இல்ல
பட்டயத்த நம்பி நான் வரல
பயந்து ஓட கோழை இல்ல
குட்டிகுட்டிப் பிசாசெல்லாம்
கட்டப்பட்டுத்தான் ஓடட்டும்
எதிரிகள் ஒண்ணோடொன்னு
வெட்டுப்பட்டுத்தான் மடியட்டும்

மரத்தில தூக்கப்பட்டு எனக்காக சாபமான
இயேசுவின் நாமத்துல விடுதலையை எடுத்துக்கறேன்
எனக்கு எதிரான கையெழுத்தெல்லாம் குலைத்துப்போட்ட
கல்வாரி இரத்தத்தினால் கட்டுகள நான் உடைக்கிறேன்
மந்திரத்தகடு, மாயவித்தை, மைபொம்மை, சூனியம்,
குறிசொல்லுதல், அஞ்சனம் பார்த்தல், கைரேகை ஜோஷ்யம்
இயேசுவின் இரத்தத்தினால் இல்லாமலே மறையட்டும்
தேவ அக்கினி இதை சுட்டெரித்துப் போடட்டும்

பரம்பரை சாபங்களும் பலவித உடன்படிக்கைகளும்
இயேசுவின் நாமத்துல வேரறுந்து போவதாக
பொருத்தனைப் பிணப்புகளும் பொருந்தாத இணைப்புகளும்

ஆத்தும பந்தங்களும் அறுப்புண்டு போவதாக
விபச்சாரம், வேசித்தனம், இச்சை, களியாட்டுகள்,
வண்கண்ணும், பொறாமையும், தூஷணம், புறங்கூறுதல்,
வஞ்சனையின் வல்லமையெல்லாம்
வலுவிழந்து போகட்டும்
கொஞ்சம்கூட இல்லாமலே கூண்டோடு ஒழியட்டும்

இருளின் கிரியைகளும் இதை இயக்கும் பலவானும்
இயேசுவின் நாமத்தினால் இறுக்க கட்டப்படுவதாக
கனவுல உள்ள நுழைஞ்ச
காத்து கறுப்பின் விஷங்களெல்லாம்
கர்த்தரின் அக்கினியால் சுட்டெரிக்கப் படுவதாக
பலவீனம், பயம்நடுக்கம், பரிகசிப்பு, ஒதுங்குதல்,
சுயஞானம், தற்பெருமை, கலகம், முரட்டாட்டங்கள்
விரட்டி அடிக்கிறேன் விரைவாய் வெளியேறட்டும்
கிறிஸ்துவின் சிந்தை மட்டும் எனக்குள் குடியேறட்டும்

## 82

**நீ நீதிமானாக இருந்தால் என்ன**
அதினால் அவருக்கு என்ன லாபம்
நீ பாவம் செய்து மரித்தால் என்ன
அதினால் அவருக்கு என்ன நஷ்டம்
உனக்கு நன்மை உண்டாகும்படிக்கே
அவரின் கற்பனையைக் கைக்கொள்
இந்த உண்மைகளை உணரும்படிக்கே
வேத வார்த்தைகளை உட்கொள்

நீ யாராயிருந்தால் எவருக்கென்ன
இயேசுதான் வழி சத்தியம் ஜீவன்
இங்கு எது நடந்தாலும் யாருக்கென்ன
அவரால் மட்டுமே நித்திய ஜீவன்

கிழக்கும் மேற்கும் எத்தனை தூரமோ
அத்தனை பாவங்களும் மன்னித்தவர்
வழக்கும் வாதும் எத்தனை இருந்தாலும்
இரக்கம் காட்டி உன்னை இரட்சிப்பவர்

வானமும் பூமியும் படைத்தவரை உன்
வார்த்தைக்கு இணங்கச் சொல்வாயோ
ஞானமாய் பேசத் தெரியும் என்றெண்ணி
நாட்களைக் கடத்திச் செல்வாயோ
ஒவ்வொரு முறையும் உனக்கு வருவது
உன்னத தேவனின் வாய்ப்பு மட்டுமே
இன்னும் உனக்கிந்த ஜீவன் இருப்பது
எப்படியாகிலும் நீ திருந்த மட்டுமே

நீ மறுதலிப்பாய் என்று தெரிந்தும் உன்னை
நேசிப்பதை அவர் நிறுத்தவில்லை
உன் இருதயக் கடினம் அறிந்தும் அவர்மனம்
எந்த நாளும் உன்னை வெறுக்கவில்லை
அவர் அன்பின் ஆழம் உனக்குத் தெரியுமா
அனுபவிக்க நீ வேண்டாமா
உனக்கு கிடைத்த நாளிலாகிலும்
உணர்ந்து திருந்த வேண்டாமா

## 83

காட்சிப் பொருளாக நிற்பவரும் இல்லை
எந்த கடைத்தெருவிலே விற்பவரும் இல்லை
அவர் கல்லோ மண்ணோ மரமோ அல்ல
ஜீவனுள்ள தேவன்
வெறும் பொன்னோ பொருளோ இயற்கை அல்ல
அகிலம் படைத்த ராஜன்

மண்ணில் உதித்ததெல்லாம் மகத்துவம் ஆகுமா
கண்ணில் பட்டதெல்லாம் கடவுள் ஆகுமா
எண்ணம் எழுத்தில் வரும் தத்துவங்கள் எல்லாம்

ஏட்டுச் சுரைக்காய் அது கூட்டுக்கு உதவுமா
சர்வ ஞானியும் அவரே
சகலமும் உண்டாக்கினவரே

காற்றும் கடலும் அவர் கைகளில் அடக்கம்
காலமும் சமயமும் அவருக்குள் கிடக்கும்
பார்க்கும் இடமெல்லாம் அவரின் படைப்புகள்
உலக ஞானம் வெறும் கண்ணீர் துடைப்புகள்
சர்வ வியாபியும் அவரே
எங்கும் நிறைந்தவரும் அவரே

அதிசயம் என்பது அவரின் நாமம்
ஆசீர்வதிப்பதே அவருக்குப் பிரியம்
அற்புதம் செய்வது அவரது பழக்கம்
அன்பு காட்டுவதே அவருக்குப் பிடிக்கும்
சர்வ வல்லமை கொண்ட தேவன்
சதா காலத்திற்கும் ராஜன்

எத்தனை வழி முறை இருந்தும் என்ன
எதுவுமே நித்தியப் பாதை அல்ல
சத்திய தேவனை அறிந்து கொள்ள
சங்கடம் வேண்டாமே நெருங்கிச் செல்ல
கதவைத் தட்டுகிறார் இயேசு
அவரிடம் மனம் விட்டுப் பேசு

## 84

**போனாபோகுதுன்னு உயிரோட என்ன**
**வச்சிருக்காரு எங்க இயேசு**
**வச்சிருக்காரு எங்க இயேசு**
**அந்த மன்னாதி மன்னவரு முன்னால என்னைக்குமே**
**மத்ததெல்லாம் வெறும் தூசு**

பாடையைத் தொட்டதும்.. பரமன் கை பட்டதும்-2
செத்துப்போன மகன் கெத்தா பொழைச்சான்
ஆடையைத் தொட்டவுடன்.. ஆண்டவர் திட்டமுடன்
பன்னெண்டு வருஷ பாடு பஞ்சா பறந்திச்சு

**கானாவூர் வீட்டில கடைசி நேரத்துல**
**கலக்கினாரு எங்க இயேசு**
**கலக்கினாரு எங்க இயேசு**
**இந்த வானாதி வானங்கள உண்டாக்கி வச்சவரு**
**செய்வதெல்லாம் செம மாஸ்**

கஷ்டப்பட்டு தயங்கின...குஷ்டரோகிகளைஎல்லாம்-2
இஷ்டப்பட்டு தொட்டு சுகம் கொடுத்தவரு
முப்பத்தெட்டு வருஷமா.. முடங்கிக் கிடந்தவன
எழுப்பி நடக்க வச்சதெல்லாம் அவர் பவரு

**கல்லறையில் வச்சவன கூப்பிட்டு உயிர்கொடுத்து**
**புல்லரிக்க வச்சவரு இயேசு**
**புல்லரிக்க வச்சவரு இயேசு**
**அந்த நல்லவர வல்லவர நம்பியாரும் கெட்டதில்ல**
**என்னைக்கும் இயேசுதான் Boss (பாஸ்)**

அடிதடி இல்லாம....ஆரவாரம் பண்ணாம-2
உடனடி சுகத்த கொடுத்து ரசிச்சவரு
மறுப்பேதும் சொல்லாம..மனசு சலிக்காம
பாவியின் வீட்டிலே  போஜனம் புசிச்சவரு

**எல்லார் மனசிலேயும் இடம் புடிச்சவரு**
**இயேசுதாங்க இங்க டாப்பு-நம்ம**
**இயேசுதாங்க இங்க டாப்பு**
**இந்த மண்ணான மனுஷன பொன்னாக மாத்துற**
**இயேசு நாமம்தான் safe (சேஃபு)**
**சும்மா மத்ததெல்லாம் வெறும் டூப்பு**

சுத்து போட்ட பிசாசுக்கு... பத்துபோட வச்சவரு-2
பத்திரமா உன்ன பாத்துக்குவாரு
சொத்து பத்து அத்தனையும் நீ மட்டும் தான் அவர்க்கு
கூட்டிக் கழிச்சுப்பாரு சரிவரும் கணக்கு

**சொந்தம் கொள்ள வந்தவர முந்திக்கொண்டு சந்திக்கிற**
**கிருபை பெற்றவன்தான் வாசி**
**அந்தக் கிருபை உனக்கிருக்கா யோசி**
**இந்த வழி சத்யம் ஜீவன வல்லமையின் தேவன**
**உள்ளத்துல வச்சு இன்னும் நேசி**
**நல்லா உக்காந்து பைபிள வாசி**